

சுந்தர ராமாயணம்

பி. ஸ்ரீ

61. 'தன் வினை தன்னைச் சுடும்'

'ஒப்பில்லாத உயர்வு பெற்ற உங்கள் தலைவனை, வேடன் ஒரு மிருகத்தை வேட்டையாடுவது போல் அம்பு போட்டுக் கொலை செய்த ஒரு கொலையாளிக்கு அடிமை செய்யும் தொழிலைச் செய்யவும் வந்து விட்டீரே' என்று அனுமனைப் பரிகசிக்கும் ராவணன், வானரர்களின் புதிய தலைவனாகிவிட்ட சுக்கிரீவ மகாராஜாவையும் பரிகசிக்கிறான். 'தமையனைக் கொல்வித்த சூரன்! கொன்றவனுக்கு அன்பு காட்டும் பிரதாபன்!' என்று ஏசுகிறான்.

'இத்தகைய யோக்கியனாகிய உம் இனத் தலைவன் என்ன நீதி அறிவிக்க உன்னை இங்கே அனுப்பி யிருக்கிறான்?' என்று கேட்கிறான்.

'அஞ்சலை அரக்க!'

என்று அனுமன் சொன்னதற்குப் போட்டியாக அரக்கனும், 'உன்னைக் கொல்ல மாட்டோம்; நெஞ்சம் அஞ்சாது பேசுவாய்' என்று அபய தானம் செய்கிறான்.

தூது சொன்னது

அனுமனுக்கா இப்படித் தைரிய மூட்ட வேண்டும்?

வறிது வீழ்த்தனை
வாழ்க்கையை; மன்னறம்
சிறிதும் நோக்கலை;
தீமை திருத்தினாய்!

[வறிது – வீணே. மன் அறம் – ராஜ தர்மம். திருத்தினாய் – செய்தாய்.]

என்று ராவணேசுவரனுடைய வாழ்க்கை வரலாற்றின் சாரத்தைப் பிழிந்து காட்டவல்ல சூரனுக்கா?

அறம்தி றம்பினர்
ஆருள ராயினர்?

[திறம்பினர் – தவறி நடந்தவர்கள்.] என்ற கேள்வியை ராவணனுக்கே போடுகிறானே, ஏதோ ஒரு பாணம் போடுவது போல,—இந்தத் தீரனுக்கா ஒருவன் தைரிய மூட்ட வேண்டியிருந்தது?

ராமபாணம் குறி தவறாது என்பதையும் நினைவூட்டுகிறான். கடைசியாக அனுமன், 'மகாராஜாவின் உத்தரவை'யும் தெரிவிக்கிறான்:

'சீதை யைத்தரு –
கென்றெனச் செப்பினான்
சோதி யான்மகன்
நிற்கெ'ன்று சொல்லினான்.

[தருக என்று என – தந்து விடுவாயாக என்பதாய். சோதியான் மகன் – சூரிய குமாரனாகிய சுக்கிரீவன். நிற்கு என்று – உனக்கென்று.]

இப்படி அனுமன் கூறி முடித்ததும் மறுபடியும் ஒரு பெருஞ் சிரிப்புச் சிரிக்கிறான் ராவணன்:

என்றலும், 'இவை
சொல்லிய(து) எற்(கு)ஒரு
குன்றில் வாழும்
குரங்குகொ லாம்! இது

நன்று, நன்றென்ன
மாநகை செய்தனன்,
வென்றி என்றொன்று
தானன்றி வேறிலான்.

[எற்கு—எனக்கு. வென்றி—வெற்றி.]

சிறகு கட்டிய சொல்லம்புகள்

வெற்றி ஒன்றுதானே ராவணன் கவலை? அறத்தைப் பற்றிய பேச்சே அநாகரிகம் தான். 'குன்றில் வாழும் குரங்கு எனக்குத் தர்மோபதேசம் செய்ய வந்திருக்கிறது!' என்ற நினைப்பிலே அடக்க முடியாத சிரிப்பு வந்து விடுகிறது.

பட்டிக்காட்டு மக்களைக் காட்டிலும் காட்டு மக்களைக் காட்டிலும்கூட மலை வாழ் ஆதிவாசிகள் அநாகரிகர் என்பது குறிப்பு.

'அட தர்மம் பேசும் குரங்கே! தூது வந்து சேட்டை செய்து அரக்கரைக் கொன்றது என்ன தர்மமோ?' என்று கேட்கவும் தோன்றுகிறது.

'குரக்கு வார்த்தையும்
மானிடர் கொற்றமும்
இருக்க, நிற்க!
நீ என்கொல் அடா இரும்
புரத்தி னுள்தரும்
தூது புகுந்தபின்,
அரக்க ரைக்கொன்ற(து)?
அத்துரை யாய்?' என்றான்.

[குரக்கு வார்த்தை — குரங்காகிய சுக்கிரீவன் செய்தி. கொற்றம் — வீரப் பிரதாபம். இரும்புரம் — பெரிய நகரம்.)

அனுமன் விளைத்த வீரமும் சொன்ன நீதியும் பயன்படவில்லை. இதை அறிந்து கொண்ட அனுமன் ராவணனுடைய கர்வம் பிடித்த கேள்விக்கு அடக்கமாகப் பதில் சொல்வது போல் பேசுகிறான். நீறு பூத்த நெருப்பைப் போலச் சுடுகின்றது அனுமனின் வார்த்தை.

'உன்னை எனக்குக் காட்டுவாரில்லை. உன்னைக் கண்டு பேச வேண்டியதோ அவசியமாகவும் அவசரமாகவும் இருந்தது. அசோக வனத்தை அழித்துத் தான் அரக்கர்களின் கவனத்தை இழுக்க முடியுமென்று கருதினேன். அவர்களோ என் கருத்தை உணர்ந்து கொள்ளாமல் கொல்ல வந்தார்கள். கொல்ல வந்தவர்களைத் தற்காப்புக்காகக் கொன்று விட்டேன்' என்று கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னதோடு நின்று விடவில்லை.

தேளின் கொடுக்கைப் போல் முடிவுரையாக,

வீட்டி னேன்; பின்னை
மென்மையி னால்உன்தன்
மாட்டு வந்தது
காணும் மதியினால்!

[வீட்டினேன்—கொன்று தீர்த்தேன். மென்மையினால்—நான் என் வன்மையை ஒளித்துக்கொண்டு மென்மையாகிய அடக்கத்தை மேற்கொண்டு. உன் தன் மாட்டு — உன்னிடம். மதியினால்— என்னுடைய புத்தியினால்.]

என்று உள்ளதைத்தான் சொல்லுகிறான்.

ராவணனுக்கோ ஒரே கோபாக்கினிதான். கோரப் பற்கள் மின் வெட்ட இடிக்குரலில் கட்டளை பறக்கிறது, 'கொல்லுங்கள்' என்று. உடனே சூட்சுமமாகவும் ஸ்தூலமாகவும் ஏற்படும் கோபாவேச—சித்திரங்களைப் பார்க்கிறோம்.

கோப ஜ்வாலைகள் சிவந்த அம்புகள் போல் நீண்டு செல்வதைக் காண்கிறோம். 'கொல்லுங்கள்' என்றதுமே நெருங்குகின்ற கொலையாளிகளும் கட் புலனாகின்றனர். அந்தக் கணத்திலேயே 'நில்லுங்கள்' என்று பிறக்கும் உறுதியான ஒரு குரலும் காதில் விழுகிறது.



இந்த முரண்பட்ட உத்தரவுகளைக் கேட்டு முரட்டுக் கொலைஞர்கள் முகத்திலே அசடு தட்ட விழிக்கும் விழிப்பும், இப்படி ஒரு தடையுத்தரவு போடத் துணிந்த விபீஷணனின் நீதி-நிலையமாகிய முகமும் அப்படியே தோன்றுகின்றன.

கொல்லுங்கள் நில்லுங்கள்

எல்லாம் ஒரு பேசும் படத்தில் வருவதுபோல வந்து நிற்கின்றன, இந்தச் சிறுபாட்டிலே :

என்னும் மாத்திரத்(து),
ஈண்டெரி நீண்டுக,

மின்னும் வாளெயிற்—
றன்சினம் வீங்கினான்,

'கொன்மின்' என்றனன் ;
கொல்லியர் சேர்தலும்,

'நின்மின் !' என்றனன்
வீடணன் நீதியான்.

[ஈண்டு எரி—மிகுதியான நெருப்பு. உக—சிந்தும்படி. எயிற்றன்—பற்களை உடையவன்.]

தூதனைக் கொல்லலாகாது என்று நீதி மட்டும் பேசவில்லை. விபீஷணனுடைய புத்திமதியில், பராக்கிரமத்திற்குக் குறைவான காரியம் செய்யவேண்டாமே என்ற வேறொரு லௌகிக அம்சமும் கலந்து வருகிறது

'நமது நிலைமையை எதிரிகள் அறிந்து கொள்வதற்காகவாவது தூதன் திரும்பிப் போகவேண்டியது அவசியம் தானே? இவனைக் கொல்வது பகைவருக்குப் பயப்படுவதுமாகுமே!' என்று விபீஷணன் சொல்லி முடித்ததும், நீதிப் பகுதியைக் காட்டிலும் இந்த லௌகிக புத்திமதி ராவணனுள்ளத்தைக் கவர்ந்து விடுகிறது.


நல்ல துரைத்தாய்
நம்பி !

[நம்பி – ஆடவரில் சிறந்தவனே ; உத்தம குணம் உள்ளவனே!]

என்று ஒரு யோக்கியதாபத்திரம் கூட இப்போது பெற்று விடுகிறான் விபீஷணன்.

வாலின்மேல் பிறந்த கோபம்

இந்த நிலையில் ராவணன் அனுமனை நோக்கி, 'நீ போய்ச் சொல்லிக் கொண்டு வா அவர்களை, ஜல்தி' என்று சொல்லி விட்டு, 'நில்லு நில்லு, இந்த ஒரு தண்டனையையும் பெற்றுக் கொண்டு தானே போ' என்பதையும் சொல்லாமல் சொல்லி வைப்பது போல், அரக்க ஊழியர்களுக்கு ஓர் உத்தரவு போடுகிறான் :



' தொல்லை வாலை
மூலமறச் சுட்டு,
நகரைச் சூழ்போக்கி,
எல்லை கடக்க
விடுமின்கள் !' என்ருன்;
நின்ருர் இரைத்தெழுந்தார்.

[தொல்லை வாலை – பழமையான வாலை; தொந்தரவு கொடுக்கும் வாலை. மூலம் – அடி. சூழ் போக்கி – சுற்றி வரச் செய்து.]

'வாலியும் போனுன்; வாலும் போச்சு!' என்று அனுமன் பேசிய அந்தக் குறும்புப் பேச்சைத் தான் மறக்க முடிகிறதா? 'அவன் என்ன செய்வான்? எல்லாம் அந்த வாலின் சேட்டை தானே!' என்பது போல் தண்டனை விதிக்கின்ருன். வாலில்லாக் குரங்காக அனுமன் திரும்பிப் போனுல் தனது பராக்கிரமத்தை எதிரிகள் ஒரு போதும் மறக்க மாட்டார்கள் என்பதும் எண்ணம்.

இந்த விநோதமான தண்டனை அரக்கர்களுக்கும் குதூகலமா யிருக்கிறது. எவ்வளவு உத்ஸாகமாய்க் கட்டத் தொடங்குகிருர்கள்! அனுமனுக்கும் இது ஒரு வேடிக்கையாகவே இருக்கிறது. இது குறித்து விபீஷணனது நீதி யுள்ளம் பீதி அடைந்ததோ,— என்ன நினைத்ததோ என்பது தெரிய வில்லை.

அவர்கள் கட்டக் கட்ட, அனுமன் வடிவத்தைப் பெரிதாக்கிக் கொண்டே யிருக்கிருன். செல்வம் நிறைந்த லங்கா பட்டணத்தில் கயிற்றுப் பஞ்சமே வந்து விடுகிறது. அரக்கிமார்களின் தாலிக் கயிறுகள் தவிர, மற்றைக் கயிறுகளெல்லாம் உபயோகப்படுகின்றன!

ஒரு வெளி யிடத்திலே அனுமனை இழுத்துக் கொண்டு போய் வாலில் சீலைகளைச் சுற்றி நெய்யிலும் எண்ணெயிலும் தோய்த்து நெருப்பைப் பற்ற வைக்கிருர்கள்.

' அந்தண் நகரும்
கடிகாவும் அழிவித்(து),
அக்கன் முதலாயோர்
சிந்த நூறி,
சீதையொடும் பேசி,
மனிதர் திறம்செப்ப
வந்த குரங்கிற்(கு)
உற்றதனை, வம்மின்,
காண வம்மின்!' எனத்
தந்தம் தந்தம்
வாயில்தொறும் யாரும்
அறியச் சாற்றினர்.

[அந்தண் நகரும் – அழகிய குளிர்ந்த நகரமும். கடி காவும் – கட்டுக் காவலுள்ள சோலையையும். அக்கன் – அட்சகுமாரன். நூறி - அழித்து. வம்மின் – வாருங்கள்.]

இவ்விதமாகப் பறை சாற்றிக் கொண்டே அவர்கள் ஓடிப் போய்ச் சீதைக்கும் செய்தி சொல்லுகிருர்கள் :

பார்த்தார் ; ஓடிச்
சானகிக்கும் பகர்ந்தார் ;
அவளும் உயிர்பதைத்தாள்,
வேர்த்தாள், உலந்தாள்,
விம்மினுள், விழுந்தாள்,
அழுதாள், வெய்துயிர்த்தாள்.

[உலந்தாள் – மனம் அழிந்தாள். வெய்து – வெப்பமாக.]

சீதையின் துயரத்தைக் கண்ணுரக் கண்டு அனுபவிப்பதும் துஷ்ட குதூகலத்தின் ஒரு பகுதி தான்! அவள் ஒருவாறு சமாளித்துக் கொண்டு அக்கினி பகவானை நோக்கி, 'அனுமனைச் சுடாதே' என்று குழந்தை யுள்ளத்தோடு பிரார்த்திக்கிருள்.

வாலுக்கு வந்த கோபம்

அனுமனை அரக்கர்கள் ஊர்வலம் செய்விக்கிருர்கள். இந்த ஊர் வலமும் எதிர்பாராத நிலையில் அனுமனுடைய இரகசியத் திட்டத்திற்கே பயன்படுகிறது.

ஊர்வலம் ஊரின் கடைசி எல்லைக்கு வந்து சேர்ந்து விட்டது. ஆனுல் அனுமன் எங்கே? அடங்கிப் போய்க்கொண்டிருந்த குரங்கு, திடீரென்று பாம்புகளால் சூழப்பட்ட கருடன் போல் ஆகாயத்திலே காணப்படுகிறது!

' மன்னனை வாழ்த்தி
வாழ்த்தி வயங்கெரி
மடுப்பென் !' என்று,
பொன்னகர் மீதே
தன்போர் வாலினைப்
போக விட்டான்.

[வயங்கு – பிரகாசிக்கிற. மடுப்பென் – பற்ற வைப்பேன்.]

பயங்கரமான விதியின் கையில் பயங்கரமான ஒரு கருவியாகி விடுகிருன்!



சுந்தர ராமாயணம்

பி. ஸ்ரீ

62. தீக்கிடையே வீணாகானம்

அரக்கர் பேரூரில் ஒவ்வொரு வீடும் ராணுவத் திமிருக்கு ஓர் அரணாய் நெடிய தூண்களாலும் பெரிய சுவர்களாலும் அமைந்து, பிரமாதமான விதானங்களும் பிரம்மாண்டமான கொடிகளுமாய் நிமிர்கின்றது. ராவண பக்திக்கு அறிகுறியாகக் கம்பீரமாய்ப் பறந்து கொண்டிருக்கும் அந்தக் கொடிகளிலே தான் வால் வைத்த தீ முதன் முதல் பற்றிக் கொண்டு அந்த வீடுகள் தோறும் பரவுகிறது.

கொடியைப் பற்றி,
விதானம் கொளுத்தியே,
நெடிய தூணைத்
தடவி நெடுஞ்சுவர்
முடியச் சுற்றி,
முழுதும் முருக்கிற்றால்,
கடிய மாமனை
தோறும் கடுங்கனல்.

[விதானம் - மேற்கட்டிகள். முருக்கிற்று - அழித்தது. கடிய - பாதுகாவலையுடைய.]

சில காட்சிகள்

உயிர் தப்ப வேண்டுமென்ற ஆசை ஒரு புறம்; பிள்ளை குட்டிகளையும் அருமையான பொருள்களையும் காப்பாற்ற வேண்டுமென்ற ஆசை ஒரு புறம். உள்ளும் புறமுமாக ஊஞ்சலாடுகிறது ஜனக்கூட்டம். இது ஒரு காட்சி.

இரத்தின மயமான மாளிகைகளும் பொன்மயமான மாளிகைகளும் இப்போது நெருப்பு மயமாகவும் புகை மயமாகவும் காண்கின்றன. புகை வான வெளி மறையக் கிளம்புகின்றது.

திசை தெரியாமலே ஓடுகிறார்கள் பெண்கள், காட்டிலே மயில்கள் ஓடுவது போல:

வான கத்தை
நெடும்புகை மாய்த்தலால்,
போன திக்கறி—
யாது புலம்பினார்,
தேன கத்த
மலர்பல சிந்திய
கான கத்து
மயிலன்ன காட்சியார்.

[மாய்த்தலால் - மறைத்தலால். தேன் அகத்த - தேனை உள்ளே உடைய.]

சில பெண்கள் வெப்பம் தாங்க முடியாமல் ஒரு நீர்நிலையில் போய் விழுந்து தண்ணீரிலே கிடக்கிறார்கள். அந்தப் பக்கமெங்கும் பனி அடர்ந்தாற் போலப் புகை சூழ்ந்து கொள்கிறது. வெப்பத்திற்குப் பயந்த எருமைகளும் மேகங்கள் போல வந்து அதே நீர்நிலையில் விழுகின்றன.

அப்போது அங்கே முங்கிக் கொண்டிருந்த இளம் பெண்கள் அன்னம் போல் அஞ்சி ஒதுங்கிக் கொள்கிறார்களாம்:

மீதி மங்கலந்—
தாலன்ன வெம்புகை,
சோதி மங்கலத்
தீயொடு சுற்றலால்,
மேதி மங்குலின்
வீழ்புனல் வீழ்மட

ஓதி மங்களின்
மாதர் ஒதுங்கினர்

[மீதிமம்–மீது + இமம், மேலே பனி. மேதி – எருமை. மங்குலின் – மேகம் போல. புனல் – (இங்கே) நீர்நிலை. மட ஓதிமங்களின் – இளமையான அன்னங்களைப் போல்.]

சில பெண்கள் தப்பியோட முயற்சி செய்யாமலே 'இந்த வீட்டில் இப்படியே இந்த நெருப்புக்கே இரையாவோம்!' என்று இருந்து விடுகிறார்களாம். 'நமது பிராண நாயகரோ கொல்லப்பட்டார்' என்ற வாழ்வுக் கசப்பே காரணம்,

'இந்த ராட்சஸ பூமியிலும் இவ்வளவு தியாக புத்தியா?' என்று அதிசயித்துக் கொண்டே, தேர்கள் குதிரைகள் சோலைகள் முதலியன எரிந்து போவதையும் கண்டு போகிறோம். தப்பியோடும் போதே சிலர் புகையால் மூச்சு முட்டி நெருப்பில் விழுந்து மடிவதையும் கண்டு வருந்துகிறோம். தீப் பிடித்த ஆடையோடு சிலர் ஓடுவதையும் கண்டு மயங்குகிறோம்.

சகவாச தோஷம் தான்!

இந்த ஊரில் எத்தனையோ பான சாலைகள்! அங்கே மது வகைகள் எத்தனை! அறிவை நல்வழிகளில் வளர்க்கும் சாலைகளையோ சாதனங்களையோ குறித்து அரக்கர்களுக்குத் தான் கவலையில்லையே?

அக்கினி பகவானும் இப்போது மது பான சாலைக்கு விஜயம் செய்கிறார்! அக்கினி என்றாலே தூய்மை; எனினும் ஜாடி ஜாடியாய்க் குடங் குடமாய்க் குடிக்கிறாராம்.

பேய மன்றினில்
அன்று, பிறங்கெரி,
மாயர் உண்ட
நறவும் மடுத்தலால் ;
தூயர் என்றிலர்
வைகிடம் துன்னினல்,
தீயர் அன்றியும்
தீமையும் செய்வரால்.

[பேய மன்று – (இங்கே) மது பான சாலை. பிறங்கு—விளங்குகிற. மாயர்– (இங்கே) கெட்டவர்: கொடியவர். நறவு – மது. மடுத்தது – உண்டது. அன்றியும் – அல்லாம விருந்தே.]

தீயவர் இருக்குமிடம் சேர்ந்து பழகும் போது தூயரும் தீயராகா விட்டாலும் தீய செயல்களில் பழகி விடக் கூடும்: இப் பாடத்தையும் கற்றுக் கொண்டு மேலே போகிறோம்.

ஒரு நாடகக் காட்சி

எங்கே போகிறோம்? ஒரு நாடகம் பார்க்கத்தான். திரை யில்லாமல், மேடை இல்லாமல், பள்ளம் இல்லாமல் நடை பெறுகின்றது நாடகம் – புகைக் காடுகளுக்கும் அக்கினிச் சுவாலைகளுக்கு மிடையே.

ஒரு பிரபுவின் மாளிகை; 'கிளி மாளிகை' என்று பெயர் கொடுக்கலாம். மாளிகையின் அழகிற்காக மட்டுமல்ல. ஓர் அழகான கிளிக்கூடு அல்லது பஞ்சரம் மாளிகை முகப்பில் தொங்கிக் கொண்டிருக்கிறது.

அந்தக் கூட்டிலே ஓர் அழகான பச்சைக் கிளி. அதை ஒரு பச்சைப் பிள்ளையாகவே வளர்த்து வருகிறாள் வீட்டின் எஜமானி. பாலூட்டிச் சீராட்டுகிறாள். அவளுக்கு வேறு பிள்ளை குட்டி இல்லை.



புருஷனும் பெண்சாதியும் தான் – அந்தக் கிளிப் பிள்ளையும் தான். புருஷன் இல்லாத சமயங்களில் தன் செல்லக்

கிளியோடு கொஞ்சிக் குலாவிக் கொண்டிருப்பாள்.

இப்போது அவன் வீட்டில் தான் இருக்கிறான். கிளி கூட்டில்தா னிருக்கிறது. மாளிகை முகப்பிலே, அவள் கண்ணிலே மையிட்டுக்கொண்டு, உத்ஸாகமாய் உரையாடிக் கொண்டிருக்கிறாள் கணவனுடன்.

திடீரென்று 'தீ தீ' என்ற கூக்குரல் கேட்கிறது. அழுகுரல்களுக்கும் கதறல்களுக்குமிடையே. அவர்கள் வெளியே வந்து பார்க்கிறார்கள். அல்லோல கல்லோலப் படுகிறது கண்ணுக்கெட்டிய இடமெங்கும். ஒரு நெருப்புக் கடலே பொங்கி வருவது போலக் காண்கிறது.

அந்தப் பிரபுவும் அவனுடைய மனைவியும் என்ன செய்யப் போகிறார்கள்? விலையுயர்ந்த பொருள்களைக் காப்பாற்ற வேண்டுமென்று தோன்றவேயில்லை. எப்படியாவது தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாமோ என்ற உணர்ச்சியுடன் தான் ஓடுகிறார்கள்.

அவ்வளவு கலவரத்திலும் கலாட்டாவிலும் புருஷன் முன்னே வழிகாட்டிப் போகிறான். தொடர்ந்து போகிறாள் நாயகி.

எரிகிற மாளிகையைத் திரும்பிப் பாராமலே போய்க் கொண்டிருக்கிறான். அவளும் அப்படித் தான். கொஞ்ச தூரம் போனதும் அவள் மட்டும் திரும்பிப் பார்க்கிறாள். ஏன்?

இப்போது அப்படிப் பளிச் சென்று என்ன ஞாபகம் வந்து விட்டது? வயிர நகைகளையும் தங்கப் பாத்திரங்களையும் போட்டு விட்டுப் போகிறோமே என்ற வருத்தமா?

அவள் நினைத்த நினைப்பையும் கண்ட காட்சியையும், அடைந்த நிலையையும் கதியையும் இதோ பாருங்கள் :

பஞ்ச ரத்தொடு
 பசுநிறக் கிளிவெந்து
  பதைப்ப,

அஞ்ச னக்கண்ணின்
 அருவிநீர் முலைமுன்
  அலைப்பக், [றில்

குஞ்ச ரத்தன
கொழுநரைத்தழுவுறும்
 கொதிப்பால்,



மஞ்சி டைப்புகும்
 மின்னெனப் புகையிடை
 மறைந்தார்.

[பஞ்சரம் – கூடு. முன்றில் – முகட்டிலே. அலைப்ப – அலைபட. குஞ்சரம் – யானை. அன – அன்ன ; போன்ற. தழுவுறும் – அன்போடு நெருங்கிச் செல்ல எண்ணிய. மஞ்சு – மேகம்.]

வெளியேறின அவசரத்திலே கிளிக் கூட்டைத் திறந்து விடவும் மறந்து போனார்கள். அந்தக் கிளியைப் பற்றிய கவலை தான் இப்போது இவளுக்கு !

தான் பயந்த பெரும் பயம் அப்படியே கண்முன் ஸாக்ஷாத்காரமாகிறது. தங்கள் மாளிகையில் பிடித்துக்கொண்ட தீ அந்தக் கூட்டிலும் பற்றி எரிகிறது.

பஞ்ச ரத்தொடு
 பசுநிறக் கிளிவெந்து
 பதைப்ப,

அந்தத் தீ அவள் அடிவயிற்றிலும் பற்றி எரிவது போலத் தோன்றுகிறது.

'பைங்கிளி' என்றோ, 'பச்சைக்கிளி' என்றோ குறிப்பிடாமல்,

பசுநிறக் கிளிவெந்து
 பதைப்ப

என்று 'நீள நினைந்து' நோக்குவதில், 'பசு நிறக் கிளி எப்படிக் கரு நிறக் கிளியாகிக் கரிந்து வெந்து போகிறது!' என்ற அந்தக் கொடுமை அப்படியே நம் கண்ணுக்கும் புலனாகிறது.

இந்த நாடகம், (இதைச் சிறு கதையாகவும் நோக்கலாம்) ஆரம்பமாவது தான் எவ்வளவு நாடகத் திறனை வெளியிடுகிறது.

அவளால் சகிக்க முடியவில்லை. கண்ணீர் அருவியாகப் பொங்கி அஞ்சனத்தைக் கரைத்துக் கொண்டு கன்னத்தைக் கறுப்பாக்கி நெஞ்சிலே அலைபடுகிறது. இது உள்ளத்திலே அலை வீசும் சோக சமுத்திரத்தை எவ்வளவு தெளிவாய்க் காட்டுகிறது !

இவ்வளவு சோகத்திலும் பளிச் சென்று வருகிறது, தனக்கு முன்னே வழி காட்டிச் சென்று கொண்டிருக்கும் புருஷனின் ஞாபகம். உடனே அந்தப் பேரன்பில் கரைந்து மறைந்து போகிறது, இந்தக் கிளி–அன்பு.

அவனைத் தொடர வேணுமென்று திரும்புகிறாள். தனக்கு முன்னே யானை போல் கம்பீரமாக நடந்து சென்ற அந்த நடையை இப்போது காணவில்லை. அவள் நின்று பார்த்தது அவனுக்கு எப்படித் தெரியும் ?

அந்த ஆபத்திலும் அவனை நெருங்கிச் சென்று கொண்டிருந்ததில் அவளுக்கு ஒரு திருப்தி. வெந்து பதைத்தாலும் அவன் பக்கத்திலே இருக்க வேண்டுமென்ற ஆசை.

அப்போது தான் நெஞ்சுக் கொதிப்பு ஆறும். கணவனைக் காணுத கொதிப்பிற்கு, இலங்கையைக் கொளுத்தி வரும் தீயின் கொதிப்பும் ஒப்பாகுமா?

கணவனைக் காணுத பெண்மணி தனக்கு எதிரே ஒரு புகைப் படலத்தைக் காண்கிறாள். அப்பால் ஒன்றும் தெரியவில்லை. அந்தப் புகைக் குள்ளே பாய்ந்து மறைந்து விடுகிறாள். மேகத்திற்குள்ளே மூங்கி மறையும் ஒரு மின்னற் கொடி போலே.

கணவனை அடைந்தாளா, இல்லையா? அவனை அணுக விரும்பிய அந்தக் கொதிப்பின் கதி என்ன? யார் கண்டார்?

திரை விழுகிறது – நாடகத் திரையும், புகைத் திரையும் தான். இது குறித்து ஆலோசிப்பதற்குள் வேறு பயங்கரமான காட்சிகள் நம் கண்முன் ஓடி வருகின்றன.

பெரிய பெரிய மாளிகைகளில் தீப் பற்றிக் கொள்ளத் தப்பிப் போகும் பெண்களில் சிலர் நுண்ணிய புகைப் படலத்திலே திரை மறைவில் காணும் சித்திரப் பதுமை போலத் தோன்றுவதையும் காண்கிறோம்.


அதோ அவள் பிள்ளைகுட்டிக்காரி, இடுப்பிலே ஒரு குழந்தை. கொஞ்சம் வயதான மற்றொரு குழந்தையைக் கையால் பிடித்துக்கொண்டு போகிறாள். இன்னும் கொஞ்சம் வயதான குழந்தை பின்னே அழுது கொண்டு வருகிறது.

மருங்கின் மேலொரு
 மகவுகொண்(டு), ஒருதனி
 மகவை
அருங்கை யால்பற்றி,
 மற்றொரு மகவுபின்
 அரற்ற,—

[மருங்கின் – இடுப்பின். அரற்ற – அழ.]

வந்து கொண்டிருக்கிறாளே அந்தப் பிள்ளைகுட்டிக்காரியின் கதி தான் என்ன? நினைக்கவும் நெஞ்சு பதறுகிறது.

ரோமாபுரி எரிய ஒரு சக்ரவர்த்தி பிடில் வாசித்துக் கொண்டிருந்தான் என்பர். கம்பனோ இலங்கை எரிய வீணகானம் செய்வது போலக் காண்கின்றது இப் பாடல்களிலே.



சுந்தர ராமாயணம்

பி. ஸ்ரீ

63. வெந்து தணிந்தது

நந்தவனங்கள் வெந்து போகின்றன. கற்பகத் தருக்கள் எரிந்து கரிந்து போகின்றன. ஆயுத சாலைகளில் வில் வேல் ஈட்டி முதலியவை யெல்லாம் உருகி உண்டைகளாய்த் திரளுகின்றன.

பறவைகள் புகை நிரம்பிய வானத்தில் பறந்து போவதற்கும் பயந்து கடலில் விழுந்து மீன்களுக்கு இரையாகின்றன. இவ்விதமாகத் தீ ஊரை அழித்துச் சக்கரவர்த்தியின் அரண்மனையிலும் பற்றிக் கொள்கிறது.

ராவணன் கொதிப்பு

அரண்மனையி லுள்ளவர்களும் கலங்கி நிலை குலைந்து ஓடுகிறார்கள். கஸ்தூரி சந்தனம் முதலிய வாசனைத் திரவியங்கள் வெந்து புகைய அந்த வாசனை வெகுதூரம் வீசுகிறது. அரண்மனையின் ஏழு நிலை உபரிகைகளும் எரிகின்றன.

ராவணன் முதலானவர்கள் புஷ்பக விமானத்தில் ஏறிக் கொண்டு வானத்தில் சென்று தப்பிப் பிழைக்கிறார்கள். தன்னைப் போல் வான வீதியிலே தப்பி வந்த அரக்கர்களை நோக்கி ராவணன் பெருங் கோபத்தோடு, 'யுகாந்த காலம் வந்து விட்டதா? இப்படி நகரம் எரிவதற்குக் காரணம் என்ன?' என்று அதட்டுகிறான்.

அவர்கள் தங்கள் பந்து ஜனங்களையும் செல்வங்களையும் பறி கொடுத்துப் பரிதவித்துக் கொண்டே தப்பி வந்தவர்கள். இழந்த உறவினர்களில் யாராவது தங்களைப் போல் வந்திருக்கிறார்களோ என்று அங்குமிங்கும் பார்த்து மனமழிந்தவர்களா யிருக்கிறார்கள்.

அவர்களது பரிதாப நிலையையும், அந்தப் பரிதாப விண்ணப்பத்தையும் பாருங்கள்!

கரங்கள் கூப்பினர்,
 தம்கிளை திருவொடும்
  காணார்,
இரங்கு கின்றவல் —
 லரக்கர்,ஈ(து) இயம்பினர்,
  'இறையோய்!
தரங்க வேலையின்
 நெடியதன் வால்இட்ட
  தழலால்
குரங்கு சுட்ட(து)ஈ(து)!'
 என்றலும், இராவணன்
  கொதித்தான்

[கிளை – சுற்றத்தார். இறையோய் – தலைவனே. தரங்க வேலையின் – கடல் அலை போன்ற. ஈது – இது.]

அந்த மனநிலையில் ராவணேசுவரனைப் பற்றிய பயம்தான் ஏது? எனினும் தலைவனைக் கண்டதும் தங்கள் ராணுவ சம்பிரதாயத்திற் கிணங்கத் தம்மை அறியாமலே கைகூப்பி நிற்கிறார்கள். நின்று வயிற்றெரிச்சலுடன், 'நீ வாலில் வைத்த தீ தான் இப்படிச் சுடுகிறது!' என்கிறார்கள்.

ராவணனுள்ளம் கொதிக்கிறது சுடப்பட்ட இலங்கை போல.

'இன்று புன்றொழில் -
 குரங்குதன் வலியினால்
  இலங்கை
நின்று வெந்துமா
 நீ(று)எழு கின்றது;
  நெருப்புத்

தின்று தேக்கிடு
கின்றது ; தேவர்கள்
சிரிப்பார் !

நன்று, நன்று போர்
வலி !' என இராவணன்
நக்கான்.

[என்று கொல் – எப்போது தான். அன்னது – போன்றது. மா நீறு எழுகின்றது—பெருஞ் சாம்பல் பறக்கிறது. தேக்கிடுகின்றது – ஏப்பம் இடுகிறது. நக்கான் – சிரித்தான்.]

வாய் சிரிக்கிறது, 'ஐயோ, தேவர்கள் சிரிப்பார்களே !' என்று. உள்ளமோ வெந்து நீறுகின்றது தலைநகரம் போலவே.

குரங்குதான் கொளுத்தினாலும் அந்த நெருப்புக் கடவுளுக்கு இவ்வளவு கொழுப்பா, பசியா? எனவே முதல் தண்டனை அக்கினி தேவனுக்குத் தான்.

'உண்டநெ ருப்பைக்
கண்டனர் பற்றிக்
கொண்டணை கெ'ன்றான்
அண்டரை வென்றான்.

[கொண்டு அணைக - பிடித்துக் கொண்டு வந்து சேருங்கள். அண்டர் – தேவர்கள்.]

எவ்வளவு பரபரப்பாக உத்தரவு பறக்கிறது என்பதற்கு இந்த விருத்தமே சாட்சி. அடுத்த உத்தரவு குரங்கையும் கைப்பிடியாகப் பிடித்து வர வேண்டுமென்பது தான்.

'உற்றக லாமுன்,
செற்ற குரங்கைப்
பற்றுமின் !' என்றான்,
முற்ற முனிந்தான்.

[உற்று அகலாமுன் –வேகமாக ஓடிப் போவதற்கு முன்னே. செற்ற – தீங்கு செய்த. பற்றுமின் – பிடித்து வாருங்கள். முற்ற முனிந்தான் – பெருங் கோபங் கொண்டவனாய்.]

தீக்காட்டில் ஒரு போராட்டம்

'புத்தி, புத்தி, அப்படியே செய்வோம்' என்று வீரர்களும் அதிகாரிகளும் கிளம்புவதைப் பாருங்கள் :

சாரயல் நின்றார்
வீரர் விரைந்தார்
'நேருதும்' என்றார்,
தேரினர் சென்றார்.

[சார் அயல் – ராவணனைச் சார்ந்த பக்கத்திலே. நேருதும் – உடன் படுகிறோம்; எதிர்த்துப்போர் செய்வோம்.]


எல்லைஇ கந்தார்
வில்லர் வெகுண்டார்,
பல்லதி காரத்
தொல்லர் தொடர்ந்தார்.

[எல்லை இகந்தார் – எல்லையற்றவர்களான. வில்லர் வெகுண்டார் –வில்வீரர்கள் கோபங் கொண்டு விரைந்தனர். பல் அதிகாரத் தொல்லர் – பல வகை அதிகார பதவிகளை நெடு நாளாய் வகிப்பவர்கள்.]

ஏழு வீரர்கள் தலைமை வகிக்கிறார்கள். எப்போதுமே போருக்கு அறிகுறியான தும்பைப் பூமாலையை அணிந்து கொண்டிருப்பவர்கள். இவர்கள் கடல் போலப் பொங்கி யெழுந்த வீரர்களை யெல்லாம் விரைவில் அணிவகுத்துச் சித்தம் செய்கிறார்கள்.

நீர்கெழு வேலை
நிமிர்ந்தார்

தார்கெழு தானை
சமைந்தார்,



போர்கெழு மாலை
புனைந்தார்
ஓரெழு வீரர்
உயர்ந்தார்.

[நீர் கெழு வேலை நிமிர்ந்தார் — நீர் மயமாயுள்ள கடல் போலப் பொங்கிச் சென்ற, மேலே சொன்ன, வில் வீரர், தேர் வீரர், அதிகாரிகள் முதலானவர்களை யெல்லாம். தார் கெழு — படை வகுப்பு அமைந்த சேனையாக.]

இவர்கள் அனுமனை நாடிப்போய் ஓடி வளைந்து கொள்கிறார்கள்.

'பற்றுதிர்! பற்றுதிர்!'
என்பார்;
'எற்றுதிர்! எற்றுதிர்!'
என்பார்;
முற்றினர் முற்றும்
முனிந்தார்;
கற்றுணர் மாருதி
கண்டான்.

[எற்றுதிர் — தாக்குங்கள். முனிந்தார் - கோபாவேசமுள்ளவர்கள். முற்றினர் — வளைந்தார்.]

தன்னை வளைந்து கொண்ட அரக்கர்களை அனுமனும் வளைத்துக் கொள்கிறான். அவர்களில் ஒருவரையும் ஓடிப் போக விடாமல் நெருப்பு மயமான வாலைக் கொண்டு சுற்றி வளைக்கிறான்.

எல்கொடு வஞ்சர்
எதிர்த்தார்
கால்கொடு கைகொடு,
கார்போல்,
வேல்கொடு கோலினர்;
வெந்தீ
வால்கொடு தானும்
வளைந்தான்.

[எல்கொடு — (ராவணன் முன்னிலையில்) ஏற்றுக் கொண்டு. எதிர்த்தார் — எதிர்த்து. கார் போல் — மேகம் போலத் திரண்டு. கோலினர் — (அனுமனை) வளைந்து கொண்டார்கள்.]

இவர்கள் பட்ட பாடு இந்தப் பாட்டின் ஓசைப் பொலிவிலேயே பதிவாகியிருக்கிறது:

நூறிட மாருதி
நொந்தார்
ஊறிட, ஊனிடு
புண்ணீர்
சேறிட, ஊரடு
செந்தீ
ஆறிட, ஓடினர்
தாறாய்!

[நூறிட மாருதி - அனுமன் அழிக்க. நொந்தார் ஊறிட — நொந்த அரக்கர்கள் காயமடைய. ஊனிடு புண்ணீர் - அவர்கள் உடம்பி விருந்து பெருகிய இரத்தம். சேறிட — தரை சேறாகும்படியும். ஊர் அடு செந்தீ ஆறிட - ஊரை எரித்த செந்தீ ஆறும்படியும்.]

தீக் கொளுத்திய தன் வாலுக்கு வேலை முடிந்து விட்ட தென்பதை இப்போது அனுமன் உணர்கிறான். உடனே வாலைக் கடலில் தோய்க்கிறான்.

அதுவும் அரக்கர்களுக்குத் தண்டனையாகு மென்பதை இவன் எப்படி அறிவான்?

தோய்ச்சனன் வாலதி;
தோயாக்,
காய்ச்சின வேலை
கலந்தார்
போய்ச்சிலர் பொன்றினர்
போனார்;
எச்சென மைந்தர்
எதிர்ந்தார்.



[தோய்ச்சனன் - தோய்த்தனன். வாலதி - வால். தோயா - தோய்த்த தால். வேலை - கடலில். கலந்தார் போய்ச் சிலர் — வெப்பத்திற்கு ஆற்றா மல் முன்பே சென்று முழுகிக் கொண்டிருந்த அரக்கர்களில் சிலர். பொன்றினர் போனார் — இறந்தொழிந்தார்கள். ஏச்சென மைந்தர் எதிர்ந்தார் — இப்படிச் சாவது ஏச்சென்று எஞ்சி நின்ற வீரர்கள் அனுமனை எதிர்த்து அழிந்தார்கள்.]

லங்கா தகனம் செய்யும் போது அனுமன் எவ்வளவோ ஜாக்கிரதையாகத்தானிருந்தான். சீதைக்கு ஆபத்து ஏற்படலாகாதே!

எனினும் நகரமெங்கும் தீப் பற்றிக் கொண்ட போது, உள்ளுக்குள்ளே கொஞ்சம் கவலை தான்.

இந்தச் சமயத்தில் வானத்திலே கிளம்பிப் போகும் வித்யாதரர்கள். 'இந்த நெருப்பானது சீதை இருக்கிற சோலைக்குப் பக்கத்திலும் போகவில்லை!' என்று ஆறுதல் அளிக்கிறார்கள்.

வந்தவர் சொல்ல
மகிழ்ந்தான்
வெந்திறல் வீரன்,
வியந்தான்;
'உய்ந்தனென்!' என்ன
உயர்ந்தான்;
பைந்தொடி தாள்கள்
பணிந்தான்.

[உய்ந்தனென் — பிழைத்தேன். பைந்தொடி — (இங்கே) சீதை.]

'நான் உஜ்ஜீவித்தேன்' என்ற அந்த உத்ஸாகத்திலே உயர்ந்தவனாய்ச் சீதையையும் பிரத்தியட்சமாகக் கண்டு அடிகளை நோக்கிப் பணிகின்றான். அவளுக்கோ இவனைப் பற்றிய கவலை தான்!

இந்தச் சந்திப்பு எவ்வளவு அழகாய், இரத்தினச் சுருக்கமாய்ச் சித்திரிக்கப் படுகிறது!

பார்த்தனள் சானகி
பாரா,
கூர்த்தெரி மேனி
குளிர்ந்தாள்
வார்த்தைஎன்? 'வந்தனை!'
என்னாப்,
போர்த்தொழில் மாருதி
போனான்.

[பாரா — பார்த்து. கூர்த்த எரிமேனி — மிகுதியாக எரிவதுபோல் தாபங் கொண்டிருந்த மேனி. என் — என்ன. வந்தனை என்னா — வந்தனம் என்று சீதை சொல்லிவிட.]

சீதை அனுமனைப் பார்க்கும் இந்தக் குளிர்ந்த பார்வை ஒன்றே அனுமன் செய்த பணிகளுக்கெல்லாம் தக்க பரிசு. இப்போது ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ள வேண்டிய வார்த்தை தான் என்ன இருக்கிறது?

'வந்தனம்' என்ற ஒரே வார்த்தை தான் இந்தச் சந்தர்ப்பத்தில் சீதை வாயிலிருந்து வெளிப்படுகிறது. இப்படிச் சரியான சந்தர்ப்பத்தில் வெளிப்படும் சரியான சிறு வார்த்தையையும் 'மௌனம்' என்றே குறிப்பிடுகிறார் ஓர் அறிஞர்.


ஆனால் தன் போர்த் தொழிலை முற்றும் வெற்றி பெற முடித்துக் கொண்ட மாருதிக்கோ — சொல்லின் செல்வனாயிருந்தும் — ஒரு சொல்லும் இப்போது வெளிப்படவில்லை. மௌனமாகவே விடைபெற்றுக் கொள்கிறான்.

தீயும் தணிந்து விடுகிறது, எந்த வாலை நம்பி அக்கினிதேவன் இலங்கையை எரிக்கத் துணிந்தானோ, அந்த வாலும் அனுமனும் போய்விட்டார்களே!



"......டேய் பஞ்சு! என் கல்யாணத்துக்கு நீ ஒரு 'டீ ஸெட்' 'பிரஸண்ட்' பண்ணினாயே ஞாபகமிருக்கா... அடுத்த மாசம் என் ஷஷ்டி அப்த பூர்த்தி வரப்போறதே... என்ன பண்ணப் போறே!"

"ஒரு பல் ஸெட் பிரெஸண்ட் பண்ணி விடுகிறேன்!"



சுந்தர ராமாயணம்

பி. ஸ்ரீ

64. அன்பு மந்திரம்

அந்த மலைச்சிகரத்தில் சூரியோதயம் ஆகிவிட்டதா? அனுமனுடைய வெற்றிப் பொலிவு தான் முகத்திலே அப்படி வீசுகிறதாம்.

'நேரமாகி விட்டதே; விரைவில் புறப்பட வேண்டும்' என்ற எண்ணம் உதயமாகி விட்டது. உத்ஸாகத்தால் உள்ளம் பூரிக்க, உடம்பும் அதற்குத் தகுந்தபடி பூரித்துக் கொண்டே வருகிறது. அந்தப் பூரிப்பிலே, 'உலகையெல்லாம் விழுங்கி விட்டான்!' என்று சொல்லும்படி வளரும் பெருவடிவு (விசுவரூபம்) வந்து விடுகிறதாம்.

இவ்வளவு குதூகலத்திலும் தன்னைப் பற்றி நினைப்பே இல்லை. ராமனும் ராம காரியமும் தான் நினைப்பு, விருப்பம், நோக்கம், லட்சியம் எல்லாம்.

ஓரே வேகம்

'எல்லாம் அவன் அருள் தான்' என்று மகா வீரனும் தன் இஷ்டதெய்வமுமான ராமனுடைய அடி மலர்களைத் தொழுது வாழ்த்தி வான வீதியிலே வெகு வேகமாய்ப் போகிறான்.

'நீங்குவென் விரைவின்'
என்னும் நினைவினன்,
மருங்கு நின்ற(து)
ஆங்கொரு குடுமிக்
குன்றை அருக்கனின்
அணைந்த ஐயன்
விங்கினன், உலகை-
யெல்லாம் விழுங்கினன்
என்ன, வீரன்
பூங்கழல் தொழுது
வாழ்த்தி விசும்பிடைக்
கடிது போனான்.

[மருங்கு – அங்கே. குடுமி – சிகரம். அருக்கனின்–சூரியன் போல. அணைந்த– அடைந்த. ஐயன் – (இங்கே) அனுமன். விங்கினன் – வடிவம் பூரித்தவனாய். பூங்கழல் – தாமரை மலர் போன்ற திருவடிகள். விசும்பிடை – வானவழியாக. கடிது - விரைவாக.]

வழியில் மைநாக மலைக்கு ஒரு கணத்தில் செய்தியை உணர்த்தி விட்டு, அதே கணத்தின் மறு பாதியிலேயே தன்னுடைய நண்பர்கள் தனக்காகக் காத்திருக்கும் மகேந்திர மலையில் குதித்து விடுகிறான். கடல் தாவி இலங்கை நோக்கிச் செல்லுகையில் தன் மீது தங்கிப் போகவேண்டுமென்று மைநாகமலை வேண்டிக் கொள்ள, 'காரியத்தை முடித்துக் கொண்டு திரும்பிவரக் கூடுமானால் உன்னோடு விருந்து சாப்பிடுவேன்' என்று வாக்குக் கொடுத்திருந்தான் அல்லவா?

எவ்வளவு துரிதமாக மைநாகத்தைக் கண்டு போகிறான் பாருங்கள்:

மைந்நாகம் என்ன
நின்ற குன்றையும்
மரபின் எய்தி,
கைந்நாகம் அனையோன்,
உற்ற(து) உணர்த்தினன்,
கணத்தின் காலைப்,

பைந்நாகம் நாக்கும்
வீரர் தன்நெடு
வரவு பார்க்கும்

கொய்ந்நாகம் நறுந்தேன்
சிந்தும் குன்றிடைக்
குதியும் கொண்டான்.

[மரபின் எய்தி-முறையாக அடைந்து. கைநாகம் – துதிக்கையையுடைய யானை. அனையோன் – போன்றவனான அனுமன். உற்றது – நிகழ்ந்ததை. கணத்தின் காலை – கணப்பொழுதிலே. பைநாகம் நாக்கும் வீரர் – பச்சை மலைகளைப் பேர்த்தெடுத்துத் தள்ளும் வானர வீரர்கள். நெடு வரவு – நெடுந் தூரத்திலிருந்து வந்து கொண்டிருக்கும் வருகை. கொய்நாகம்-மலர் கொய்வதற்கு உரிய சுரபுன்னை மரங்கள். நறுந்தேன் – நல்ல தேன்.]

இலங்கைக்கு அனுமன் புறப்பட்டது முதல் அவனுடைய வரவை ஆவலுடன் எதிர்நோக்கிக் கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் பார்த்துக் கொண்டிருக்கும் வானர வீரர்களையும், அவர்களைச் சூழ்ந்து பூக்களும் தேன் கூடுகளுமாயிருக்கும் விருட்ச ஜாலங்களையும், அவற்றுக்கிடையே அனுமன் போய்க் குதிப்பதையும், அப்போது தேன்கூடுகள் சிதைந்து தேன் சிந்துவதையும், ஏதோ ஒரு மந்திரக் கண்ணாடி வாயிலாகப் பார்ப்பது போல் பார்க்கிறோம், இந்தக் கவிதைக் கண்ணாடி வாயிலாக.

அனுமனுக்கு என்ன நேர்ந்திருக்குமோ என்ற அச்சத்தினாலும் (அன்புள்ள இடத்தில் அச்சமும் இருக்குமே!), க்ஷேம சமாசாரத்துடன் தூதன் வந்து சேரவேண்டுமே என்ற கவலையினாலும், அந்த வானர விரர்களுக்கு வாய் குளறிவார்த்தை தடுமாறியதாம், ஒருவரோடொருவர் பேசிக் கொண்டிருக்கும்போதே.

அனுமபலம் அவர்களுக்குத் தெரியாததா? 'வெற்றியோடு வருவான்; அந்த வெற்றியில் நமக்கும் பங்கு உண்டு' என்ற நம்பிக்கையும் ஒருபுறம். எனினும் அவ்வளவு அச்சம், அவ்வளவு கவலை, அவ்வளவு ஆத்திரம்!

சற்றுத் தூரத்தில் அவனைக் கண்டதுமே, 'போன காரியம் முடிந்து விட்டது'என்று மகிழ்ச்சி யடைகிறார்கள். தாய்ப் பறவையை எதிர்பார்த்துக் கூண்டில் காத்திருக்கும் குஞ்சுகளைப் போலல்லவா வரவு பார்த்திருந்தார்கள்?

பட்டமரம் தளிர்ப்பது போல் தளிர்க்கிறார்கள் உவகையினால்!


'போய்வரும் கருமம்
முற்றிற்று!' என்பதோர்
பொம்மல் பொங்க,

வாய்வெரீஇ நின்ற
வென்றி வானர
வீரர் மன்னோ,

பாய்வரு நீளத்து
ஆங்கண் இருந்தன
பறவைப் பார்ப்புத்

தாய்வரக் கண்ட —
தன்ன உவகையிற்
றளிர்த்தார் அம்மா!

[பொம்மல் – மகிழ்ச்சி. வாய்வெரீஇ-வாய்வெருவி; அச்சத்தால் வாய் குளறி. வென்றி – வெற்றி. மன்னோ – அசை. பாய்வரு-பாய்ந்து, உள்ளே புகுவதற்கு உரிய. நீளம் – கூண்டு. ஆங்கண் – அவ்விடத்திலே. பார்ப்பு - குஞ்சு. கண்டது அன்ன – கண்டது போன்ற. உவகையின் - உவகையினால். அம்மா - அதிசயக் குறிப்பு.]



தாய்ப் பறவையை எதிர்பார்த்துக் கூண்டிலிருக்கும் குஞ்சுகளைப் போல் அனுமனது வரவு பார்த்திருந்த வானர விரர்கள், அவனைக் கண்டதும் பட்ட



மரம் தளிர்ப்பது போலத் தளிர்க்கிறார்களாம் உவகையினால்.

இத்தகைய மகிழ்ச்சியிலே வாய் குளறிப் பேசவும் மறுத்து விடுகிறது. உவகை மிகுதியால் அழுகையே வந்து விடுகிறதாம்.

சிலர் ஏதேதோ ஆரவாரம் செய்கிறார்கள். அந்த ஆரவாரத்திற்கும் ஆவேசத்திற்கு மிடையே உருப்படியான வார்த்தை ஒன்றும் வெளிப்படவில்லை.

சிலர் அனுமனை நெருங்கி வருகிறார்கள். அப்பால் இன்னது செய்வதென்று தெரியாமல், அமைதியாகத் தொழுது நிற்கிறார்கள்.

வேறு சிலருக்கு அந்த அமைதி பிடிக்கவில்லை, ஆடித் துள்ளுகிறார்கள், குதித்துக் கூத்தாடுகிறார்கள்.

சிலர் அனுமனைச் சூழ்ந்து மொய்த்தவர்களாய், அப்படியே அள்ளி விழுங்குவார் போலப் பார்க்கிறார்கள்.

சிலர் சுற்றிச் சுற்றி வந்து ஆசை தீரத் தழுவிக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் அனுமனை அப்படியே தூக்கிச் சுமக்கிறார்கள்.

இந்த ஆனந்தக் கூத்தையெல்லாம் பின்வரும் கவிதை வாயிலாக நாமும் அனுபவிக்கிறோம் :

அழுதனர் சிலவர் ;
முன்நின்று ஆர்த்தனர்
சிலவர் ; அண்மித்

தொழுதனர் சிலவர் ;
ஆடித் துள்ளினர்
சிலவர் : அள்ளி

முழுதுற விழுங்கு -
வார்போல் மொய்த்தனர்
சிலவர் ; சுற்றும்

தழுவினர் சிலவர் ;
கொண்டு சுமந்தனர்
சிலவர் தாங்கி !

[ஆர்த்தனர் – ஆரவாரம் செய்தனர். அண்மி -- சமீபத்தில் நெருங்கி.]

அனுமன் வந்து சேர்ந்ததும், செய்தி விசாரிக்கவும் தோன்றவில்லை. அந்த முகத்திலே ஜொலிக்கும் தன்மான வீரமும் தேஜஸுமே வாய் திறப்பதற்கு முன்னமே செய்தி சொல்லி விட்டனவாம்.

அனுமனுக்குத் தற்பெருமை கடுகளவேனும் உண்டா ? அந்தப் பணி செய்

யும் பேறு கிடைத்ததே என்ற பெருமை தான்; பிராட்டியைத் தரிசித்து வந்த அந்த ஆனந்தச் செய்தியை முகத்தின் ஒளியே தெரிவித்து விடுகிறது.

இந்த நிலையில் வானர வீரர்கள் தாங்கள் அருமையாய்த் தேடிக் கொணர்ந்து வைத்திருந்த தேனையும் காய் கிழங்குகளையும் அனுமன் முன்பு படைத்து, 'முதலில் நீ சாப்பிடு; களைப்புத் தீர்ந்த பிறகு எல்லாம் விவரமாய்ப் பேசிக்கொள்ளலாம்' என்று உபசரிக்கிறார்கள். இந்த விதமாகத் தாங்கள் உண்ணுதற்கு வைத்திருந்த உணவு வகைகளை யெல்லாம் வரிசை வரிசையாகக் கொணர்ந்து குவிக்கிறார்களாம்.

அனுமன் மெலிவு கருதித் தங்கள் பசியையும் மறந்து உபசரித்துக் கொண்டிருக்கும் நட்புக் காதலையும் இதோ பாருங்கள் :

'தேனொடு கிழங்கும்
காயும் நறியன
அரிதிற் தேடி
மேன்முறை வைத்தோம்;
அண்ணல் ! நுகர்ந்தனை,
மெலிவு தீர்தி ;
மானவாள் முகமே
நங்கட்(கு) உரைத்தது
மாற்றம் !' என்னுத்,
தாம்நுகர் சாகம்
எல்லாம் முறைமுறை
சிலவர் தந்தார்.

[நறியன –நல்லனவாக. மேன் முறை– முன்னமே ஒழுங்காக. அண்ணல்–அண்ணலே; பெருந்தன்மையுள்ள அநுமனே நுகர்ந்தனை – நீ நுகர்ந்து; நீ உண்டு. மெலிவு தீர்தி – மெலிவு தீர்வாயாக. மானவாள்முகமே– தன் மானமும் ஒளியும் கொண்ட உன் முகம் தானே. நங்கட்கு – எங்களுக்கு. மாற்றம் – செய்தி. என்னு – என்று சொல்லி. தாம்நுகர் – தாங்கள் உண்ணுதற்கு வைத்திருந்த; சாகம் எல்லாம் – இலையுணவு முதலிய எல்லாவற்றையும்.]

இப்படி உபசரிக்கும் போது, அனுமனது முகத்தைக் காட்டிலும் உடம்பிலுள்ள புண்கள் கவனத்தை வசீகரிக்கின்றன: 'ஐயோ காலிலே காயம்: கையிலே காயம்; இதோ தோள்களில் காயம் !' என்று பெருமூச்சு விடுகிறார்கள். 'அதோ தலையில்; இதோ மார்பிலே !' என்று உருகுகிறார்கள்.

'இவை வாள்களால் ஏற்பட்ட புண்கள்; அவை வேல் குத்தியவை; அதோ அம்பு தொளைத்த புண்கள்!' என்பது போன்ற சிந்தனைகளுடன் பார்த்துப் பரிதவிக்கிறார்கள் :

நாள்களில் மார்பில்
தோளில் தலைதனில்
தடக்கை தம்மில்,
வாள்களின் வேலின்
வாளி மழைகளின்
வகிர்ந்த புண்கள்,
நாள்கள்மேல் உலகில்
சென்ற எண்ணென
நம்பி கண்ண,
ஊர்கொள நோக்கி
நோக்கி உயிருக
உயிர்த்து நொந்தார்.

[தாள்களில்–கால்களிலும். தடக்கை தம்மில் – பெரிய கைகளிலும். வாளி மழைகளின் – அம்பு மழைகளினலும். வகிர்ந்த – பிளந்து உண்டாக்கப்பட்ட. நாள்கள் மேல் உலகில் சென்ற எண்ணென –மேலுலகத்திலே செல்லுகின்ற நட்சத்திரங்களின் தொகை போல. நம்பி கண்ண – அனுமனிடத்து உள்ள மிகப் பல புண்களை. ஊழ் கொள – முறைப்படி ஒவ்வொன்றாக. உயிர் உக – உயிர் வெளியில் சென்று விடுமோ என்று கருதும்படி. உயிர்த்து நொந்தார் – பெருமூச்சு விட்டு நொந்து போனார்கள்.]

அனுமன் மேனியில் அத்தனை புண்களைக் கண்ட வானர வீரர்கள், அந்தச் சத்துருக்களின் வாள் முதலியன தங்கள் உடலின் மீது பட்டன போலவே நைந்து நொந்து போகிறார்களாம். இது அன்பின் உச்ச நிலையில் ஏற்படக் கூடிய அனுபவம்.

'நான் காயம் பட்டவனைக் காணும் போது, அனுதாபப் படுவதில்லை; நானே அவனாகி அந்தக் காயத்தை அப்படியே அனுபவித்து நொந்து கிடக்கிறேன் !' என்றார் வால்ட் விட்மன் என்ற மகாகவி. இந்த அனுபவ முதிர்ச்சியைப் பரம பக்தமணிகளான நம்மாழ்வார், கிறிஸ்து போன்றவர்களிடம் காணலாம்.

இத்தகைய ஒருவகை அனுபவ நிலையை அனுமனுடைய வானர நண்பர்களும் அடைந்தனரென்றால் அந்தப் பேரன்புத் திறனை என்னென்பது? பக்திக் காதல் செய்யும் அற்புதத்தை நட்புக் காதல் செய்து விடுகிறது இங்கே.



சுந்தர ராமாயணம்

பி. ஸ்ரீ

65. 'வியாசர்' செய்யாத விருந்து

அவரவருக்கு உரிய மரியாதை செய்து எல்லோருடைய உள்ளத்தையும் வசமாக்குவதற்காக இந்தச் 'சொல்லின் செல்வன்' சொல்லும் வார்த்தைதான் என்ன, பார்த்தீர்களா? தென் திசையைச் சுட்டிக் காட்டி, 'ஆங்கண் இருந்து, இவண் இருந்தோர்க்கெல்லாம், ஞால நாயகன்தன் தேவி சொல்லினள் நன்மை' என்று எவ்வளவு சுருக்கமாய்ச் சொல்லி விடுகிறான் அந்த மந்திர வார்த்தையை!

சொல்லின் செல்வன் சுட்டிக் காட்டிய அந்தத் தென் திசையை நோக்குகிறார்கள். 'அந்த இடத்திலுள்ள சிறையிலிருந்து லோக நாயகன் தேவியான லோகநாயகி இங்கேயுள்ள எங்களுக்கெல்லாம் மங்களம் சொல்லுகிறாளே!' என்று பொங்குகிறது இந்த வானர வீரர்களின் உள்ளம், அந்தத் தென் கடல் பொங்குவது போல.

என்ன ஆச்சரியம்! அவள் இவர்களைப் பார்த்ததே யில்லை. அனுமன் மூலமாகத்தான் தெரிந்து கொண்டிருக்கிறாள். எனினும், 'தன்னுடைய துயரங்களுக்கிடையே நம்மையும் நினைத்துக் கொண்டாளே! நமக்கெல்லாம் நன்மையுண்டாக வேணுமென்று விரும்புகிறாளே! சிறையிருக்கும் செல்வியின் தங்கமான உள்ளத்தை என்னென்பது!' என்று நினைத்துப் பார்த்ததும் உள்ளம் நீராய் உருகிப் போகிறது.

இவர்களுடைய உணர்ச்சியைப் புறத்திலும் அகத்திலும் அப்படியே கண்டு காட்டுவது போல வருகிறது பாட்டு:

என்றலும், கரங்கள்
கூப்பி எழுந்தனர்,
இறைஞ்சித் தாழா
நின்றனர், உவகை
பொங்க விம்மலால்.
நிமிர்ந்த நெஞ்சர்,

'சென்றது முதலா
வந்த(து) இறுதியாய்ச்
செப்பற் பாலை,

வன்றிறல் உரவோய்!'
என்னச் சொல்லினன்
மருத்தின் மைந்தன்.

[என்றலும் - என்று அனுமன் சொன்னவுடனே. இறைஞ்சித் தாழா நின்றனர் – வணங்கித் தாழ்ந்து நின்று. முதலா – முதலாக. செப்பற் பாலை – சொல்லும் தன்மையுடையாய்; சொல்லக் கடவாய். வல்திறல் உரவோய் – உடல் வலிமையும் உள்ளத் திறனும் அறிவின் உரமும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவனே. மருத்தின் மைந்தன் – வாயு குமாரனான அனுமன்.]

பேசாத பேச்சு

உவகை பொங்க விம்மி நிமிர்ந்த நெஞ்சு, நடந்த செய்திகளை யெல்லாம் ஆதியோடந்தமாகத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறது. அவன் சொல்லப் போகும் அந்த வரலாற்றிலே தான், அந்தத் தோழனுடைய தேக பலம் மனோ பலம் ஆத்ம பலம் ஆகியவை யெல்லாம் எவ்வளவு அழகாய்ப் பிரதிபலிக்கும்!

அந்த அதிசயமான கதையைக் கேட்க அவர்கள் எல்லோரும் தயாராயிருக்கிறார்கள். ஆனால் அந்த விருந்தை அளிக்க இந்த வியாசர் தயாராக இருக்கிறாரா?

ஆண்தகை தேவி
உள்ளத்(து) அருந்தவம்
அமையச் சொல்லி,

[ஆண்தகை - புருஷோத்தமனை ராமன்.]

— வேறு ஏதாவது சொல்லப் போகிருனு?

ஆண்தகைக்கு எந்த விதத்திலும் இணையான தேவி தான்; கொஞ்சமும் குறைந்தவளில்லை. அவளுடைய உள்ளத்தை என்னவென்று சொல்வது?

அருந்தவம் என்பது காட்டில் முனிவர்களிடத்தில் இல்லை; அரக்கர் பேருரில் சிறையிருக்கும் செல்வியின் உள்ளத்திலே தானிருக்கிறது. இந்த அருந்தவமாகிய குறுநிசயத்தையும் க்ஷேமத்தையும் தான் வற்புறுத்துகிருன்.

இந்த ஒரே விஷயம் தான் தெரிவிக்கிருன். 'அதற்கு என்னிடம் ஒரு சாட்சி இருக்கிறது' என்றும் சொல்லுகிருன். பொய்யே சொல்லத் தெரியாத சாட்சி!

அது என்ன சாட்சி? பெரிய அடையாளமாகக் கைக் கொண்ட சூடாமணியைத் தான் குறிப்பிடுகிருன்.

பூண்டபே ரடையா -
ளம்கைக் கொண்டதும்
புகன்று, —

[பூண்ட -- அவளால் அணிந்து கொள்ளப் பெற்றிருந்த.]

—வேருென்றும் சொல்லாமலே பேச்சை நிறுத்தி விடுகிருன்.

வேருென்றும் சொல்ல வெட்கமாயிருக்கிறதாம். அப்படி அனுமன் சொல்லாதது என்ன என்பதையும் கவிஞன் சொல்லிக் காட்டுகிருன்.

இப்போது முழுப் பாட்டையும் பார்ப்போம்.

ஆண்தகை தேவி
உள்ளத்(து) அருந்தவம்
அமையச் சொல்லிப்

பூண்டபே ரடையா —
ளம்கைக் கொண்டதும்
புகன்று, போரில் —

நீண்டவாள் அரக்க —
ரோடு நேர்ந்ததும்,
நெருப்புச் சிந்தி

மீண்டதும் விளம்பான்,
தான்தன் வென்றியை
விளம்ப வெள்கி!

[வென்றி - வெற்றி; வெள்கி-வெட்கமடைந்து.]

புன்கவீ யெல்லாம் பார்த்துப் பார்த்து, எத்தனையோ தைரிய ஸாகஸச் செயல்களைப் பற்றிக் கதை கேட்கலாம் என்ற ஆசையோடு இருந்தார்களல்லவா? அந்த ஆசையை அனுமன் நிறைவேற்றவில்லை.

போரில் அரக்கர்களுடைய ஆயுதம் நீண்டதும், அந்த ஆயுதங்களுக்கும் அவற்றை ஏந்தியவர்களுக்கும் நேர்ந்த கதி, கருங்கற் பாறையில் போய் முட்டிக் கொள்ளும் தலைக்கு நேரும் கதி தானே! ஆனுல் அந்த வீரத்தைப்பற்றி எதுவும் சொல்லவில்லை.

இலங்கை அரக்கர்களின் கவனத்தை வேறு முகமாய்த் திருப்பிவிட்டுப் புறப்படுவதற்காகவும் நெருப்பைச் சிந்தினுைம் அவட்சியமாக. அதுதான் அவ்வளவு பிரமாதப்பட்டதாம் அந்த அரக்கர் பேருரிலே. அந்த நெருப்பு - விளையாட்டைக் குறித்தும் வாய் திறக்கவில்லை.

ஏன் அப்படி? அந்தக் கதைகளைத் தொடங்கினுல் அவை தன்னுடைய வெற்றியாகுமல்லவா? எனவே சொல்ல வெட்கமா யிருக்கிறது!

என்ன ஆச்சரியமான வெட்கம்! என்ன ஆச்சரியமான உயர்தர வீரம்!

ஒரு தளபதி மந்திரி முன் ஆஜராகிருன். தன் வாளை உறையினின்றும் உருவிச் சுழற்றி வீசி எதிரே கிடந்த மேஜை மீது ஓங்கியடித்து. 'எதிரிகளை வெட்டித் தொலைத்துப் போடுவேன்!' என்று வீர கர்ஜனை புரிகின்றான். சொன்ன வண்ணம் செய்தும் விடுகிருன். இவன் தன்னைக் குறித்துத் தானே ஆரவாரம் செய்து கொண்டது வீணுகப் பெருமையடித்துக் கொண்டதன்று. அபாரமான தன்னம்பிக்கையின் வெளியீடு தான் அது.

ஆனுல் இங்கே கம்பனுடைய அனுமனு எத்தகைய சலசலப்பும் இல்லாத மகா வீரத்திற்கு இலக்கியமாய்க் காண்கிருன். அனுமனுடைய இந்த வீர பராக்கிரமச் செயல்களை யுத்த காண்டத்திலே ராவணனுடைய ஒற்றர்கள் சொல்லித்தான் ராமனும் வானரவீரர்களும் விவரமாய்த் தெரிந்து கொள்ளப் போகிருர்கள்.

மனம், வாக்கு, செயல் என்று சாதாரணமாய்ச் சொல்லுகிருர்களல்லவா?

டோம்!" என்பதையும் வெளிப்படையாகச் சொல்லிவிடுகிறார்கள்.

அனுமன் தன் சாமர்த்தியத்தை விளம்பாது வெட்கத்தால் மறைக்க முயன்றது எவ்வளவு ரஸமாயிருக்கிறதோ, அவ்வளவு ரஸமாயிருக்கிறது இவர்கள் தங்கள் சாமர்த்தி



அனுமனைப் போன்ற வீரர்களைக் குறித்தோ 'மன மெய் மொழி' என்று முறைப் படுத்துவது தான் சரியாகும். மனம் மொழியாக வெளிப்படுவதற்கு முன்பே செயலாகி விடுகிறதாம் மகா வீரர்களுக்கு!

அனுமன் சொல்லா விட்டாலும் வானர வீரர்கள் நடந்ததைக் குறிப்பாக உணர்ந்து கொள்கிறார்களாம், துப்பறியும் கதாநாயகனை ஷெர்லக் ஹோம்ஸ் போல. 'நாங்கள் எவ்வளவு சாமர்த்தியமாக ஊகித்துக் கொண்டு விட்

யத்தை மகிழ்ச்சியுடன் விளம்புவதும் விருந்து செய்யப்படவில்லை; எனினும் பசியனுக்குத் திருப்திதான்!

அனுமன் போர் செய்ததும் தெரியுமாம்; வெற்றியடைந்ததும் தெரியுமாம். ஊரில் தீ வைத்தது கூடத் தெரியுமாமே! எப்படி?

'பொருதமை புண்ணே
சொல்ல, வென்றதைப்
போந்த தன்மை

உரைசெய, ஊர்தீ
இட்டது ஓங்கிரும்
புகையே ஓத,

கருதலர் பெருமை
தேவி மீண்டிலாச்
செயலே காட்ட,

தெரிதர உணர்ந்தேம்!
பின்னர் என்இனிச்
செய்தும்?' என்றார்.

[பொருதமை – போர் செய்தது. போந்த – (இங்கே) திரும்பி வந்த. ஓங்கு இரும் – ஓங்கி யெழுந்த பெரிய. கருதலர் – பகைவர்.]

அனுமன் வாய் திறவாமலிருந்த போதிலும் அந்தப் புண்களெல்லாம் வாய்பெற்று அவன் அரக்கர்களோடு செய்த யுத்தத்தை வருணிக்கின்றன வாம்.

அந்தப் போரிலே 'தலை தப்பினது தம்பிரான் புண்ணியம்' என்று அஞ்சியோ, தந்திரம் செய்தோ தப்பி வர வில்லை; வெற்றியோடு தான் திரும்பி வந்தான் என்பதை அனுமன் திரும்பி வந்த தன்மையே உரை செய்கின்றதாம். தோற்று வந்தவன் கதைதான் முகத் தோற்றத்தில் அப்படியே எழுதப்பட் டிருக்குமே!

அந்த ஜயப் பிரதாபத்தை,

குன்றிடைக் குதியும்
கொண்டான்

என்றவாறு அப்படி வந்து குதித்த குதியே வியாக்கியானம் செய்துவிட்ட தல்லவா!

தீ வைத்தது புகையினல் தெரிந்தது என்கிறார்கள். அனுமன் போனது முதல் 'எப்போது வருவான், வருவான்?' என்று வழிமேல் விழி வைத்துக் காத் திருந்தவர்களல்லவா?

தூரத்திலே அந்தத் திசையில் புகை தெரிந்தது; பிரமாதமாக உயர்ந்து தெரிந்தது. அனுமன் அங்கே தான் இருக்கிறான்! 'இது கூடத் தெரியாதா உங்களுக்கு? உங்கள் அனுமன் செய்யும் வேலை தானே!' என்று அந்தப் புகை யே தெளிவாக ஓதி விட்டதாம்.

ஊர்தீ இட்டது

என்றும்,

ஓங்கிரும் புகையே
ஓத

என்றும் கூறுவதைப் பாருங்கள்.

பெருந்தீ, பெரும் புகை ஆகியவற் றின் பயங்கர அழகையும் கவிஞன் பக்தி யுடன் அனுபவித்திருக்க வேண்டு மென்று தோன்றுகிறது. வேதம் ஓது வது போலல்லவா அந்தப் புகையும் அந்த உண்மையை ஓதி வைத்தது?

'சத்துருக்கள் பெருமையையும் நாங் கள் நன்ருகத் தெரிந்து கொண் டோம்' என்று சொல்லுகிறார்கள். 'சீதா தேவி வராததே அந்தப் பெரு மையைக் காட்டுகிறது' என்கிறார்கள்.

ஏது புலமை?

உண்மையில் அவள் சம்மதித்திருந் தால், அனுமன் எப்படியாவது அவ ளைக் கொண்டு வந்து சேர்த்திருப் பான் — இல்லையா? எனவே அவர்க ளது இந்த ஊகம் சரியன்று. அனும னுடைய பெருமைக்கு அநீதிதான். எனினும் அனுமன் இந்தப் பிழையைத் திருத்தவும் முயலவில்லை.

'விரைவில் ராமனுக்குச் செய்தி சொல் லித் துன்பத்தை ஆற்ற வேண்டும்; இப் படி ஊகங்களில் பொழுது போக்குவது புலமையன்று, புத்திசாலித்தனமன்று' என்று ஜாடையாகச் சொல்லி அவர்கள் வாயை மூடுகிறான் அனுமன்.

இந்தப் பாட்டிலே 'சொல்ல' 'உரை செய' 'ஓத' 'காட்ட' என்ற சொற் களை ஊன்றி நோக்குங்கள். இவை பொருளின் நுணுக்க வேறுபாடுகள் தோன்ற உபயோகிக்கப் படுகின்றன என்பது கவனிக்கத் தக்கது.

'உரைப்பது' வியாக்கியானம் செய் வது போல் விளக்கமாய்ச் சொல்வது என்றும், மாற்று விளங்கும்படி உரைத் துக் காட்டுவது போலச் சொல்வது என்றும் பொருள் படுகின்றது. 'ஓதுவது' மறை ஓதுவது போல், தேவாரம் ஓதுவதுபோல் பக்தியுடன் பேசுவது. 'காட்டுவது' பிரத்தியட்ச மாக்குவது.

'என் இனிச் செய்தும்?' என்று வின விய வானர நண்பர்களை நோக்கி அனு மன், 'இனி நாம் ராமனை விரைவில் அடைந்து சீதையைக் கண்ட செய்தி சொல்லித் துயரம் தீர்க்கவேண்டும். இதுவே நாம் இப்போது செய்ய வேண் டிய காரியம்' என்று சொல்லுகிறான். உடனே எல்லாரும் இசைந்து புறப்படு கிறார்கள்.



66. மணி வாசலும், பின்னுக்கும்

'தேவியைக் கண்ட செய்தியை விரைவில் சொல்லி ராமனுடைய துயரை ஆற்ற வேண்டும்' என்ற நோக்கத்துடன் வானர வீரர்கள் அனைவரும் விரைவாகப் போய்க் கொண்டிருக்கும் போது, ராமன் என்ன நிலையில் இருக்கிறான்? சுக்கிரீவன் தேறுதல் சொல்லிக் கொண்டிருக்கிறான். எனினும் பிராட்டியைப் பிரிந்த சோகம் தாங்க முடியாதபடி ராமன் அடிக்கடி சோர்ந்து மயங்குகிறான்.

நட்புச் சிகிச்சை

சுக்கிரீவன் பக்கத்திலிருந்து அன்புடன் இனிய வார்த்தைகள் சொல்லித் தேற்றத் தேற்றப் போன உயிர் மீண்டு வருவதுபோல இருக்கிறதாம். இப்படி எத்தனை தடவை உயிர் போய்ப் போய் மீளுகிறது! 'ஆருயிர் ஆயிரம் உடையவனோ?' என்று பிரமிக்கத் தோன்றுகிறது.

இதோ பாருங்கள், பிரிவுத் துயரத்தின் அவஸ்தைகளையும்; நட்புக் காதலின் சிகிச்சையையும்;

> கார்வரை இருந்தனன்
> கதிரின் காதலன்
>
> சீரிய சொற்களால்
> தெருட்டச் செங்கணான்,
>
> 'ஆருயிர் ஆயிரம்
> உடைய னும்எனச்,
>
> சோர்தொறும் சோர்தொறும்
> உயிர்த்துத் தோன்றினன்.

[கார்வரை – பெரிய மலை. கதிரின் காதலன் – சூரிய புத்திரனாகிய சுக்கிரீவன். சீரிய – நல்ல. தெருட்ட – தேற்ற. செங்கணான் – சிவந்த கண்களையுடைய ராமன். ஆர் – அருமையான. உயிர்த்து– உயிர் பெற்று.]

வடக்கு கிழக்கு மேற்கு என்னும் மூன்று திக்குக்களிலும் தேடப் போனவர்கள், 'காணவில்லை' என்று திரும்பி விட்டார்கள். அந்த வார்த்தை எப்படி ஹிம்ஸை செய்தது?

நம்பிக்கை – வைத்தியம்

அந்த ஹிம்ஸைக்கிடையே ஒரு நினைவு தான். அந்த நினைவினால் பிறந்த நம்பிக்கை தான், 'உண்டு உயிர் உள்ளே; இன்னும் வெளிப்படவில்லை!' என்ற நம்பிக்கையையும் தருகிறதாம். அந்த நினைவு தான் அனுமனையும் அவனுடைய மகா பலத்தையும் குறித்த நினைவு.

சுக்கிரீவனது நட்புச் சிகிச்சையுடன் அனுமனைக் குறித்த நம்பிக்கையும் சேர்ந்து தான், போய்க் கொண்டிருந்த உயிரை உள்ளே பிடித்து நிறுத்திக் கொண்டிருக்கிறதாம். சுக்கிரீவனுடைய உபதேசங்களைக் காட்டிலும் அதிக அளவில் அனுமனுடைய செயல்-திறனில் ராமனுக்குள்ள நம்பிக்கைதான் பயன்படுகிறது என்றும் கருதலாம்:

> 'தண்டலில் நெடுந்திசை
> மூன்றும் தாயினர்,
>
> கண்டிலர் மடந்தையை'
> என்னும் கட்டுரை

'உண்(டு)உயிர் அகத்(து)!'என
ஒறுக்க வும்முளன்,
திண்திறல் அனுமனை
நினையும் சிந்தையான்.

[தண்டலில் – தடை இல்லாமல். மூன்றும் தாயினர் – மூன்றிலும் தேடுவதற்கு விரைந்து போனவர்கள். கட்டுரை – (இங்கே) உறுதியான வார்த்தை. அகத்து – அகத்திலே; உள்ளே. ஒறுக்கவும் – ஹிம்ஸிக்கவும். உளன் – உள்ளவனுன். திண்திறல் அனுமனை – மிக்க வலிமையுள்ள அனுமனை.]

சிகிச்சை மீறிய நோய்

இவ்விதமாகத் துயரக் கடலில் ஆழ்பவனுய்ச் சுக்கிரீவனை நோக்கி ராமன், 'நண்பா, இனி நாம் சும்மா இருப்பது சரியன்று; கொடிய பழி வந்து விட்டது' என்று சொல்லத் தொடங்குகிறுன் ஒரு நாள்:

ஆரியன் அருந்துயர்க்
கடலுள் ஆழ்பவன்,
'சீரிய தன்றுநம்
செய்கை; தீர்வரும்
பூரிய வெம்பழி
பொடித்த தாம்'எனுச்,
சூரியன் புதல்வனை
நோக்கிச் சொல்லினுன்.

[ஆரியன் – ராமன்; சீரியது அன்று – தகுதியுடையதன்று: நம் செய்கை – நாம் இப்படிச் சோம்பி ஒன்றும் செய்யாமல் சும்மா இருக்கும் இந்தச் செய்கை. தீர்வு அரு – தீர்க்க முடியாத. பூரிய வெம்பழி – இழிவான கொடிய பழி. பொடித்ததாம் – அமைந்ததாகும். எனு – என்று.]

இந்தச் செய்யுளில் தொகுத்துச் சுட்டியதை வகுத்துக் காட்டுகின்றன ஒரே தொடராக வரும் அடுத்த நான்கு கவிகளும். தென்திசை சென்றவர்களைக் குறித்து ராமன் மனத்தில் என்ன என்ன தோன்றுகிறது பாருங்கள்:

'மாண்டனள் அவள்; இவண்
மாண்ட வார்த்தையை
மீண்(டு) அவர்க்(கு) உரைத்த
விளிதல் நன்றெ'னுப் பின்
பூண்டதோர் துயர்கொடு
பொன்றி னுர்கொலோ?



தேண்டினர் இன்னமும்
திரிகின் றுர்கொலோ?


[விளிதல் – செத்துப்போதல். இவண் – இங்கே. உரைத்தலின் – சொல்வதைக் காட்டிலும். எனு – என்று. பொன்றினுர் – இறந்தார். தேண்டி – தேடி.]

'தெற்கே போனவர்கள் யமலோகத்திற்கே அப்படியே போய்ச் சேர்ந்து விட்டார்களோ?' என்ற பயங்கர நினைப்பும் உண்டாகிறது. 'சாவோலை கொண்டு போவதை விட நாமும் செத்துப் போவது தான் நல்லது!' என்று அந்தத் துயரத்திலேயே இதயம் வெடித்து மாண்டுபோனுர்களா? இப்படி வருந்தும் போதே, 'இன்னமும் தேடித்திரிகிறுர்களோ?' என்ற சந்தேகமும் குறுக்கிடுகிறது.

திடிரென்று வேருரு நினைப்பும் தோன்றுகிறது. இந்த நினைப்பையும் நண்பனேடு பங்கிட்டுக் கொள்கிறுன்:

கண்டனர் அரக்கரை,
கறுவு கைம்மிக
மண்டமர் தொடங்கினுர்
வஞ்சர் மாயையால்
விண்தலம் அதனின்மே—
யினர்கொல்? வேறிலாத்
தண்டலில் நெடுஞ்சிறைத்
தளைப்பட் டார்கொலோ?

[கறுவு – கோபத்தோடு கூடிய மனவைரம். கைம்மிக – அதிகமாக. மண்டமர் – மண்டு அமர்; மிகுதியான சண்டை. விண்தலம் – சொர்க்கம். வேறிலா – வேறே தப்பும் வழி இல்லாமல். தண்டலில் – நீங்காத. தளை – விலங்கு.]



என்று எவ்வளவு பரிதாபமாய்க் கேட்கிறான்

அரக்கர்களைக் கண்டதும் எவ்வளவு அடத்தோடும் அடங்காத கோபத்தோடும் சண்டை போட்டிருப்பார்கள்! எதிரிகளோ வஞ்சகர்கள், மாயாவிகள்; சும்மா விடுவார்களா?

அவர்கள் இவர்களைக் கொன்று விட்டார்களா? அல்லது கைவிலங்கு கால் விலங்கு போட்டு மீளாத சிறைக்குள் தள்ளி விட்டார்களா?

இருள் கீறிய இரவி

குமுறுகிறது ராமனுள்ளம். இப்படி ராமன் சுக்கிரீவனை வினவி வருந்திக் கொண்டிருக்கும்போதே, தெற்கே ஒரு சூரியன் உதயமாகிறதா, என்ன?

அந்தத் திசையை எவ்வளவு அன்போடு ராமன் உற்று நோக்குகிறான்!

என்புழி, அநுமனும்
இரவி என்பவன்

தென்புறத் துளன்னனத்
தெரிவ தாயினுன்,

பொன்பொழி தடக்கைஅப்
பொருவில் விரனும்

அன்புறு சிந்தையன்
அமைய நோக்கினுன்.

[என்புழி — என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கும்போது. இரவி — சூரியன். பொன் பொழி தடக்கை — அழகு பொழிகின்ற பெரிய கைகளையுடைய. அப்பொருவில் வீரனும் — ஒப்பற்ற வீரனுன ராமனும்.]

சுக்கிரீவன் பதில் சொல்லத் தொடங்குவதற்குள்ளே, ராமன் பேசி முடிப்பதற்குள்ளே, 'அனுமன் முதலானேர் சிறைப்பட்டார்களோ?' என்று கவலையுடன் கலக்க முற்றிருக்கும்போதே, வந்து விடுகிறுன் அனுமன் ராமனை நோக்கி. அந்த முகத்திலே தான் என்ன தேஜஸ், எவ்வளவு உத்ஸாகம்!

அனுமன் வந்ததும் என்ன செய்கிறுன்? ராமனைத் தொழுது செய்தி சொல்ல வேண்டியது தானே?

எய்தினன் அனுமனும்,
எய்தி, ஏந்தல்தன்
மொய்கழல்—

[எய்தினன் – வந்து சேர்ந்தான். ஏந்தல் – ராமன். மொய் கழல் – பெருமை வாய்ந்த திருவடி.]

'தொழுகிறுன்'—என்று தானே கவிஞன் சொல்லப் போகிறுன்? அதுதான் இல்லை!

அனுமன் ராமனுடைய திருவடி தொழ வில்லையாம். வேறே என்ன செய்யப் போகிறுன்?

எய்தினன் அனுமனும்
எய்தி, ஏந்தல்தன்

மொய்கழல் தொழுதிலன்,
முளரி நீங்கிய

தையலை நோக்கிய
தலையன், கையினன்,

வையகம் தழீஇநெடி(து)
இறைஞ்சி வாழ்த்தினுன்.

[முளரி – தாமரைப் பூ. முளரி நீங்கிய தையல் – சீதையாகிய லட்சுமி. வையகம் – பூமி. தழீஇ – தழுவி.]

இந்தச் செய்கை ராமனுக்கும் ஆனந்தமாகவே இருக்கிறது. அனுமன் வாய் திறப்பதற்கு முன்னமே சீதையின் க்ஷேமம் தெரிந்து விடுகிறதல்லவா?

திண்திற லவன்செயல்
தெரிய நோக்கினுன்,

'வண்டுறை ஓதியும்
வலியள்; மற்(று) இவன்

கண்டதும் உண்(டு), அவள்
கற்பும் நன்றெ'னக்

கொண்டனன் குறிப்பினுல்
உணரும் கொள்கையான்.

[திண்திறல் அவன் — மிக்க திறமையுள்ள அந்த அனுமனது. வண்டு உறை ஓதியும்—வண்டுகள் தங்குகின்ற கூந்தலையுடைய சீதையும். வலியள்—க்ஷேமமாயிருக்கிருள்.]

ராமன் இப்படிக் குறிப்பறிந்து உவகை கொள்ளும்போதே அனுமன் செய்தி சொல்லத் தொடங்கி முதன் முதல் தொகுத்துக் கூறுகிற வார்த்தையும் காதில் விழுகிறது:

'கண்டனென் கற்பினுக்(கு)
அணியைக் கண்களால்

தெண்டிரை அலைகடல்
இலங்கைத் தென்நகர்!

அண்டர்நா யக! இனித்
துறத்தி ஐயமும்,

பண்டுள துயரும்' என்(று)
அனுமன் பன்னுவான்.

[தெண்டிரை அலை – தெள்+திரை+அலை—தெளிவான அலைகளை அலைக்கும். அண்டர் – தேவர். துறத்தி – நீங்குவாயாக. பண்டுள – முன்னமேயுள்ள. பன்னுவான் – சொல்வான்.]

'கண்டனென் கற்பினுக்கு அணியை' என்று அனுமன் செய்தி சொல்லத் தொடங்குவது எத்தனையோ காலட்சேபங்களில் விரிவுரை செய்யப்பட்டிருப்பதைப் பலரும் அறிவர். இதைக் காட்டிலும் ஒரு பொருத்தமான ஆரம்பம் இருக்க முடியுமா, இந்தச் 'சொல்லின் செல்வன்' இனி வகுத்துக் கூறப் போகும் சீதையின் குணநிசயத்திற்கு?

'சீதையை' என்று ஆரம்பித்தால், 'ஐயோ! என்ன சொல்லப் போகிருனே?' என்னும் கவலை இன்னும் ஏற்படக் கூடுமாம், அன்பின் மிகுதியால். எனவே 'கண்டேன்' என்று தொடங்குகிறுன்.

இனிமேல் பல பாடல்களால் தான் வகுத்துக் கூறப்போகும் அந்தக் 'குண சௌந்தரிய மாஹாத்மியம்' என்ற அந்தப் பிரபந்தத்திற்குத் தான் எவ்வளவு அழகான பீடிகை!

ஒரு பின்னோக்கு

'திருவடி தொழுத படல'மாகிய இந்த இறுதிப் படலத்தின் முதற் பாட்டே,

நீங்குவென் விரைவின்

என்று தொடங்குகிறது. முடிகிறது,

விசும்பிடைக் கடிது
போனான்.

[விசும்பிடை – வானத்திலே. கடிது – விரைவாக.]

என்று.

இந்த விரைவிற்கு இசைந்தபடி அனுமன் வானரங்களிடையே குதிப்பதும், அவர்களுடைய மகிழ்ச்சி - ஆரவாரங்களையோ அனுதாப உணர்ச்சிகளையோ பொருட்படுத்தாமல் ராமனைச் சந்திப்பதற்காக அவர்களைத் துரிதப்படுத்துவதும் நிகழ்கின்றன.

அனுமன் தன் யாத்திரையையும் லங்கா விருத்தாந்தத்தையும் வருணித்துரைக்கும் பகுதி ஒரு நீண்ட ஸர்க்கமாக வால்மீகத்தில அமைந்திருக்க, 'அப்படி ஒன்றும் அனுமன் சொல்லவேயில்லை; அவர்கள் சிலவற்றைக் குறிப்பால் உணர்ந்து கொண்டார்கள்' என்பதாக இரண்டே பாடல்களில் முடித்துக்கொள்கிறான் கம்பன். அப்படி நீண்ட கதை சொல்ல இந்த அனுமனுக்கு அவகாசம் எங்கே?

இதே காரணம்தான், வால்மீகத்தில் விவரமாக வருகின்ற மதுவன அழிவுக் கதை விடப்படுவதற்கும் காரணமாகும். இப்போதுள்ள கம்ப ராமாயணப் பிரதிகளில் மதுவனக் கதை காணப்படுவது உண்மைதான். பழைய ஏடுகளை ஆராய்ந்து நிபுணர்கள் ஆராய்ச்சிப் பதிப்பு வெளியிடும்போது, மதுவனப் பாடல்களும் ததிமுகன் கதையும், அனுமன் விரைந்து போய்ச் செய்தி சொல்வதற்கு இடையூறுகளாக இடம்பெறப் போவதில்லையென்பது திண்ணம்,

'தேவி தன்னைக் கண்டது விரைவில் ராமனிடம் சொல்ல வேண்டுமெ'ன்று 'பொருக்கென' எழுந்து சென்றவர்கள், தங்கள் பசியையும் மதுவெறியையும் மறந்து ராமனை அடைகிறார்கள் என்பது கம்பன் கதை.

உழைத்த காசு

"சுகி"

சு. மு. நல்லசிவம் பிள்ளை—ஜவுளிக் கடை முதலாளி—பணத்தைக் கொடுக்கும்போதே, அழுது கொண்டு தான் கொடுத்தார். அதிகப் பற்றுக் கொடுக்கும் முதலாளிகள் செய்கிற அந்தக் காரியத்தைச் செய்ததில் வியப்பில்லை.

கல்லில் நார் உரிப்பது போல ரூபாய் இருநூறு முதலாளியிடம் வாங்கிக் கொண்டு சிவஷண்முகம் பிள்ளை நடந்து கொண்டிருந்தார். முன் பணமாக வாங்கிய அந்தத் தொகையை மாசம் பதினைந்து ரூபாயாகச் சம்பளத்தில் பிடித்துக் கொண்டால், தன் குடும்ப ரதம் எப்படி நகரும்? அந்தக் கவலை இப்போது ஏன்? இன்றைய கஷ்டத்திற்கு கதி மோட்சம் கிடைத்தால் போதும்!

சிவஷண்முகம் பிள்ளை, மணிபர்ஸில் பணம் இருக்கிறதாவென்று ஒரு முறை தட்டிப் பார்த்துக் கொண்டார். முதலாளியின் பணத்தை ஆயிரம் பதினாயிரமாக எடுத்து வரும்போது இல்லாத பயம், கவலை இப்போது. மணிபர்ஸுக்குள் மடித்திருந்த மணியார்டர் பாரத்தையும் ஒரு முறை பார்த்தார். குறிப்பைக் கண்டதும் சிரித்துக் கொண்டார்.

"அன்புள்ள கனகத்திற்கு, உபய க்ஷேமம். நீயும் மற்றும் குழந்தைகளும் சௌக்யமாக இருக்க இந்தப் பணம் அனுப்புகிறேன். இதனால் நான் படுகிற கஷ்டம் இன்னும் அதிகம். இனி குழந்தைகள் பிறந்தால் உன்னால் தாங்க முடிந்தாலும் என்னால் தாங்க முடியாது. உடம்பைக் கவனித்துக் கொள். பணத்தைப் பாஷாணமாக நினைத்துச் செலவு செய்.

இப்படிக்கு,
செ. சி. ஷண்முகம்.

வேறு பாரம் வாங்கி நல்ல வார்த்தையாக எழுதலாமா? 'பணம் பாஷாணம்' என்ற குறிப்பு மனைவியின் மதிவதனத்தைப் பாழாக்கி வெறுப்பு விதை ஊன்றிக் கிளைக்குமோ? இப்படியும் ஒரு கவலை. 'பரவாயில்லை, குறிப்பாக மனைவிக்கும் பணத்தின் கஷ்டத்தை உணர்த்தியிருக்கிறோம், இதைச் சொல்ல வேண்டியது தான்' என்ற திருப்தியும் மனத்தில் எழுந்தது.

இவ்வாறு பல கஷ்டங்களையும், வருங்காலத்தில் தமக்குப் பணம் குவியவிருக்கும் மார்க்கத்தையும் எண்ணிக் கொண்டு அவர் பஸ்-ஸடாப்பில் வந்து நின்றார். தொலைவில் பஸ் வந்து கொண்டிருந்தது. க்யூவில் நின்றவர்கள் அடித்துப் புடைத்துக் கொண்டு ஏற முயற்சி செய்தார்கள். இந்த பஸ் ஏறும் யுத்த களத்தில், சிவஷண்முகம் பிள்ளை வெற்றியடைந்து பஸ்ஸுக்குள் போய் அமர்ந்தார், வியர்வைத் துளிகளைத் துடைத்தார். நகர்ந்த பஸ்ஸுக்குள் காற்றின் அசைவு இதமாக இருந்தது.

"டிக்கெட் ப்ளீஸ்" — குரல் கேட்டு, சில்லறையை எடுக்கப் போன சமயம், அங்கே பர்ஸை இல்லை! தூக்கி வாரிப் போட்டு வாழ்வின் இறுதியே வந்து விட்டது போன்று துடித்தார். நடுத் தெருவில் இறக்கி விடப் பட்டது போலவே, அவர் வாழ்வும் நடுவீதியில் நின்றது. நிற்பதாக எண்ணினார்.

2

முதலாளியின் கண்கள் கோவைப் பழம் போலச் சிவந்தன. உதடுகள் துடித்தன.

"உம்முடைய வேஷத்தை நம்பினேன். நான் ஒரு முறை ஏமாந்து. அதிகப் பணம் ரூபாய் இருநூறு கொடுத்தேன், பணம் போதாது என்று நானூறு ரூபாயை ஒரே தபாவாகக் கேட்டால் கொடுக்க மாட்டேனா? இருநூறு ரூபாய் பணம் திருட்டுப் போனதாகச் சொல்வது, பிறகு இருநூறு ரூபாய் கேட்பது எல்லாம் முழுப் பொய். பொய் தவிர வேறென்ன? நான் நம்ப முடியாது, மேல் கொண்டு பணம் காலணா தர மாட்டேன்."



67. இருவேறு யாத்ரா மார்க்கங்கள்

இறுதிப் படலமாகிய 'திருவடி தொழுத படல'த்திலே கம்பன் பாடியுள்ள நிகழ்ச்சிகளுக் கெல்லாம் ஆதாரம், வால்மீகி சுந்தர காண்டத்திலே 57-ம் ஸர்க்கம் முதல் 68-ம் ஸர்க்கம் வரை வருணிக்கப்படுகின்ற நிகழ்ச்சிகளாகும். இந்த ஸர்க்கங்களை யெல்லாம் கருத்தூன்றிப் படிப்பவர்கள் வால்மீகி மாமுனிவர் கதை சொல்லும் கலையிலும், இசை மயமான சுலோகங்களை அடுக்கிக் கொண்டே போகும் கவிதைப் புலமையிலும் நிகரற்றவ ரென்பதை நன்குணர்வார்கள். ஆனால் கம்பனுடைய கவிச் சிற்பத்திறன் வேறு வகையில் அமைந்திருக்கிறது என்பதை நாம் மறக்கலாகாது.

ஆதி கவியும் ஞானபுத்திரனும்

இந்தப் பகுதியில் வால்மீகியின் கதை நீளமாகவே செல்லுகிறது; எனினும் ரஸமா யிருக்கிற தென்பதில் ஐயமில்லை. அனுமன் தன் யாத்திரையை வருணிப்பதும், மதுவன அழிவு-நிகழ்ச்சிகளும் இப் பகுதியில், 'நீள நினைந்து' கதை வளர்க்கும் ஆதிகவியின் ஆற்றலுக்குச் சான்ருகின்றன. இந்த இரண்டு அம்சங்களையுமே கம்பன் விட்டு விடுகிருன்.

அனுமன் வடகரைக்கு வரும்போதே ஜாம்பவான் மிக்க மகிழ்ச்சியுடன் வானரர்களை அருகே அழைத்து, 'அனுமன் உத்தேசித்திருந்த காரியத்திற்கு வெற்றிதான்; இல்லா விட்டால் இவ்வளவு தைரியமாகவும் சந்தோஷமாகவும் சப்தம் செய்வானு ?' என்ருன். உடனே வானரர்கள் தாவிக் குதித்தார்கள்; மரக்கிளைகளை மகிழ்ச்சியுடன் அசைத்தார்கள். கிழங்குகளையும் பழங்களையும் அனுமனுக்குக் காணிக்கையாய்க் கொடுத்தார்கள். இது ஸர்க்கம் ஐம்பத்தேழில் வால்மீகி கூறியுள்ள ஆரம்ப வரலாறு. இக் குறிப்புக்களைக் கம்பன் எப்படி மாற்றி அமைத்துக் கொள்கிருன், தன் சிற்பத்திறனுக்கிசைய !

அதே ஸர்க்கத்தில் 'கண்டேன் சீதையை' என்று நடந்த விருத்தாந்தங்களைச் சுருக்கமாய்த் தெரிவித்தான் அனுமன். வெந்த உள்ளத்திலே அமிர்த தாரை போல் விழுந்தன அனுமனுடைய வாக்கியங்கள். வானரர்கள் வால்களைத் தூக்கிப் பூமியில் அடித்தும், அனுமனைத் தழுவிக் கொண்டும் தங்கள் குதூகலத்தை வெளிப்படுத்தினுர்கள். இயற்கையாகக் கண்முன் நடப்பது போலவே நடக்கிறது கதை. கம்பனது கலைப் போக்கோ வேறு.

பிறகு, அனுமன் பெருங் கடலைத் தாண்டினதையும், இலங்கையைப் பார்த்ததையும், சீதையைத் தரிசித்ததையும் ராவணனைக் கண்டு பேசினதையும் இன்னும் வேறு விருத்தாந்தங்களையும் விவரமாய்க் கேட்க விரும்பினுர்கள். விரும்பிப் பெரிய பாறையில் அனுமனுக்கெதிரே கைகூப்பி உட்கார்ந்தார்கள். மகேந்திரகிரியின் அந்தப் பகுதி காந்தியால் ஜொலித்தது.

இத்தகைய பீடிகையுடன் ஆரம்பமாகிறது, அனுமன் தன் யாத்திரையை

வருணிக்கும் விருத்தாந்தம். இப்பீடிகை 57-ம் ஸர்க்கத்தின் இறுதியில் அமைய, அனுமன் சுந்தர காண்டத்தையே ஒரு திருப்புத் திருப்பிக் காட்டுவதுபோல் தன் யாத்திரையை விவரிக்கிற ஸர்க்கம், ஆனந்தமாய்த் தென்றலின் மந்த நடை போடுகிறது.

இந்த ஸர்க்க ஆரம்பத்திலேயே ஜாம்பவானும் அனுமனை நோக்கி, 'சீதையை எப்படிக் கண்டு பிடித்தாய்? அவள் எந்த நிலைமையில் இருக்கிறாள்? ராவணன் அவளிடம் எப்படி நடந்து கொள்கிறான்? இவை எல்லாவற்றையும் எங்களிடம் உண்மையாகச் சொல்லி விடு. ராம ஸந்நிதியில் எதை விண்ணப்பஞ் செய்யவேண்டுமென்பதையும், இனிமேல் செய்ய வேண்டியது என்ன என்பதையும் நிச்சயிப்போம்' என்று சொல்லித் தூண்டி விட்டான்.

அனுமன் மிக்க மகிழ்ச்சியுடன் கை கூப்பிச் சீதையை உள்ளத்திலே வணங்கித் தன் யாத்திரையை வருணிக்கத் தொடங்கினான். 'நீங்கள் பார்த்துக் கொண்டிருந்த பொழுதே இந்த மகேந்திர மலையிலிருந்து வானத்தில் தாவிக் கடலைத் தாண்டித் தெற்குக் கரை சேர உத்தேசித்தேனல்லவா? வழியில் ஒரு மலை தங்க மயமான சிகரங்களுடன் திடீரென்று கிளம்பி வழி மறித்தது......' என்று அவ்வளவு விவரமாகத் தன் யாத்திரைப் பேச்சைத் தொடங்கி விட்டான்.

கம்பனிலோ, இவர்களிடம் எதைச் சொல்ல வேண்டியது என்பதையும், எதை மறைக்க வேண்டியது என்பதையும் அனுமனே நிச்சயித்துக் கொண்டு, உத்ஸாகத்தையும் ஒருவாறு கட்டுப் படுத்திக் கொண்டு பேசுகிறான். வில்லின் செல்வனிடத்திலும் இச்சொல்லின் செல்வன் தானாகவே மறைக்க வேண்டியதை மறைத்துப் பேசித் தீர்த்து விடுகிறான், வேறு தூண்டுதலோ ஆலோசனையோ இல்லாமலே.



சித்ரலேகா

சுந்தரச் சுருக்கம்

இனி, அனுமன் தன் யாத்திரையை வருணிக்கும் ஸர்க்கச் சுருக்கத்தைத் தெரிந்து கொள்வோம். மைநாகம் வழி மறிப்பதைக் கண்டு தன் யாத்திரைக்கு இடையூறு வந்து விட்டதாகத் தான் மயங்கிச் சீறிய அந்த விருத்தாந்தத்தை விவரமாய்ச் சொல்வதுடன் ஆரம்பிக்கும் ஸர்க்கம், 'சீதையிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு அரிஷ்ட பர்வதத்தில் ஏறி வான வீதியில் வந்து இங்கே உங்களைக் கண்டேன்......மேல் நடக்க வேண்டியவைகளை நீங்களே செய்து முடிக்க வேண்டியது' என்பதாக முடிவு பெறுகின்றது.

மைநாகத்தைப் பற்றிய விவரங்களுக்குப் பின், ஸுரஸை என்ற தேவஸ்திரீ



யின் சோதனையால் ஏற்படுகின்ற இடையூறும் வருணிக்கப் படுகிறது. பிறகு பயங்கரமான ராட்சஸியால் விளைந்த மூன்ருவது இடையூறும் பேசப்படுகிறது.

'ஊர்தேடு படல'மும் அநுமனுல் உரைக்கப்படுகிறது. லங்கா தேவதையை ஜயித்த ஜயமும், ஊரெல்லாம் தேடி அசோக வனத்தில் கோர ராட்சஸிகளுக்கிடையே சீதையைத் தரிசித்த விருததாந்தமும் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

ராவணன் சீதையைச் சந்தித்த வரலாறும், சீதை நிந்தித்த விவரமும், காவலாளிகளான அரக்கியர்கள் கண்களை உருட்டி விழித்துப் பயமுறுத்திய கதையும் விவரிக்கப்படுகின்றன. திரிஜடை அரக்கியர்களுக்கு எச்சரிக்கை செய்து சீதைக்கு ஆறுதல் அளிப்பதும் ஓதப்படுகிறது.

அப்பால் அனுமன் தான் சீதையைச் சந்தித்த விருத்தாந்தத்தை விளக்குகிருன். கணையாழி கொடுத்ததும் சூடாமணி பெற்றதும் விவரிக்கப்படுகின்றன.

சீதையை நோக்கி, 'ராம லட்சுமணர்களுடைய சமீபத்தில் கொண்டு போய் விடலாமா?' என்று தான் கேட்டதையும் அனுமன் பிரஸ்தாபிக்கிருன். அவள் மறுத்து விட்டாளென்பதையும் தெரிவிக்கிருன். சூடாமணி கொடுத்த சீதை, 'ராம லட்சுமணர்களைப் படையுடன் வரச் செய்வது உன் கடமை; இரண்டு மாதங்களுக்கு மேல் பிழைத்திருக்க மாட்டேன்' என்று தன் அபிப்பிராயத்தை முடிவாகத் தெரிவித்ததாகவும் சொல்லுகிருன்.

அந்தத் தீனமான வார்த்தை கேட்டதும் தனக்குத் தலைகால் தெரியாத கோபம் வந்து விட்டதாகவும், அரக்கர்களுடன் போர் செய்ய விரும்பி அசோக வனத்தை அழித்ததாகவும் சொல்லுகிருன். கிங்கர வதம், ஜம்புமாலி வதம், ஏழு மந்திரி புதல்வர்களின் வதம், ஐந்து சேனுதிபதிகளின் வதம், அட்சகுமாரன் வதம் ஆகிய வதங்களெல்லாம் ஒன்றுகூட விடப்படாமல் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. தன் கூட்டாளிகள் விரும்பியபடியே அனுமன் ஒன்றையும் மறக்கவில்லை, மறைக்கவும் இல்லை என்றே தோன்றுகிறது.

இந்திரஜித்து வந்து தன்னைக் கட்டிக் கொண்டு போனதையும் அனுமன் பிரஸ்தாபிக்கிருன். 'ஆயுதங்களால் என்னை வெல்ல முடியாது என்று கண்டு அந்த அரக்கன் அதிவேகமாய் என்மேல் பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்துக் கட்டினுன்' என்கிருன். இந்தப் பிரஸ்தாபத்திலே இந்திரஜித்தின் பராக்கிரமத்தைக் காட்டிலும் அனுமன் பராக்கிரமம் வற்புறுத்தப் படுகிறது.

கட்டுப்பட்ட அனுமன் ராவணனிடம் போய்த் தூது சொன்ன விருத்தாந்தமும் விவரிக்கப்படுகிறது. சுக்ரீவனுக்கும் ராமனுக்கும் ஏற்பட்ட நட்புரிமை வரலாற்றையும், வாலி வதச் செய்தியையும் தூதனுகிய தன் மூலமாக மகாராஜா சொல்லி யனுப்பியதாய்த் தான் ராவணனிடம் தெரிவித்ததாகவும் அனுமன் சொல்லுகிறுன்.

'அந்தத் துஷ்டன் என் மகிமையை அறியாமல் கொன்று விடுமாறு கட்டளையிட்டான்' என்றும் சொல்லுகிறன். பிறகு விபீஷணன் தனக்காகப் பரிந்து பேசியதையும், கடைசியாக ராவணன் 'குரங்கின் வாலைக் கொளுத்தி விடுங்கள்' என்று கட்டளையிட்டதையும் தெரிவிக்கிறுன்.

வாலில் அக்கினிக் குஞ்சு வைத்ததும், அந்தக் குஞ்சை இலங்கையில் வைத்ததும் விவரிக்கப்படுகின்றன. 'ஓரிடம் பாக்கி இல்லாமல் எங்கும் வெந்து சாம்பலாயிற்று' என்ற அந்தத் திருப்தியும் தனைத் திறமையும் மறைக்கப் படவில்லை.

'ஐயோ! புத்தி யில்லாமல் இலங்கையில் நெருப்பு வைத்துச் சீதையையும் கொளுத்தி ராம காரியத்தைக் கெடுத்து விட்டேனே!' என்று தான் துக்கமடைந்ததையும் மறைக்காமல் சொல்லி விடுகிறுன். சீதைக்கு அபாயமில்லை யென்பதைச் சாரணர்கள் மூலமாகத் தெரிந்து கொண்டு சீதையிடம் விடை பெற்று மீண்டதாகக் கூறி முடிக்கிறுன்.

இப்படி யாத்திரை விவரங்கள் கூறும் இந்த ஸர்க்கத்திலும் வாசகர்களுக்கு அலுப்போ சலிப்போ ஏற்படுவதில்லை. ஏற்கெனவே பலவேறு ஸர்க்கங்களில் காவியகதியிலே கதை நடத்தி வருவதை ஒரு ஸர்க்கத்தில் ரஸமாகத் திருப்பிக் கூறி வாசகர்களை மகிழ்விப்பதும் ஒரு வகைக் கலைத்திறன்தான் என்பதில் ஐயமில்லை. சுந்தர காண்டச் சுருக்கம் ஒரு சுந்தரமான சுருக்கமாகவே ஜொலிக்கிறது.

கம்பன் கலையோ வேறொரு யாத்ரா மார்க்கம் பிடித்துச் செல்லுகிறது என்பதை மட்டும் நாம் மறக்கவும் வேண்டாம். மறைக்கவும் வேண்டாம்.

சென்றது முதலா,
வந்த(து) இறுதியாய்ச்
செப்பற் பாலை

[செப்பற்பாலை – சொல்லக் கடவாய்.]

என்றுதான், கம்பனிலும் வானர வீரர்கள் நடந்ததை ஆதியோடந்தமாக விவரமாய்ச் சொல்லும்படி ஆவலோடு வினவுகிறுர்கள். ஆனல் கம்பனுடைய அனுமன் தன் யாத்திரையை வருணிக்க மறுத்து விடுகிறுன்.

ஆதிகாவியத்திலே வானர வீரர்கள் அனுமனைப் புகழ்ந்து விருத்தாந்தங்களை யெல்லாம் விஸ்தாரமாய்க் கேட்க விரும்பியது போல் கம்பன் காவியத்திலும்,

வன்றிறல் உரவோய்!

[வன்றிறல் உரவோய் – மிக்க பல பராக்ரமங்களும் அறிவுத்திறனும் உள்ளவனே.]

என்று புகழ்ந்து 'சென்றது முதலாக வந்தது இறுதியாக நடந்ததை யெல்லாம் விவரமாய்ச் சொல்ல வேண்டும்' என்று தான் மன்றுடுகிறுர்கள். இவ்வளவு ஆவலோடு வினவிய வானரர்களுக்கு அனுமனும் அப்படியே சுந்தர காண்டச் சுருக்கம் வெளியிடப்போவது போலத்தான்.

'வன்றிறல் உரவோய்!'
என்னச் சொல்லினன்
மருத்தின் மைந்தன்.

என்ற கவிக் கூற்றும் அமைந்திருக்கிறது.

அடுத்து வரும் பாட்டின் அமைப்பைத்தான் உற்று நோக்குங்கள்.

முக்கியமான விஷயத்தை முதன்முதல் சொல்வது போலத்தான் ஆரம்பமாகிறது பாட்டு. 'அந்த அருந்தவத்திற்குச் சாட்சியாகச் சூடாமணி விஷயத்தையும் தொடர்ந்து சொல்வதாகத் தானே வருகிறது?

'போரும் ஊர் தீ இட்டதும் ஆகிய அந்த வீரப் பெருஞ் செயல்களைப் பெரும்பாலும் சொல்லி விடுவான், அல்லது ஸாராம்சமான சிலவற்றையாவது சொல்லித் தீர்ப்பான்' என்றே நினைக்கத் தோன்றுகிறது.

'மீண்டதும் சொன்னுன்' என்று நாம் எதிர்பார்பபதற்கு முற்றும் முரண் படுமாறு,

மீண்டதும் விளம்பான்
தான்தன் வென்றியை
உரைப்ப வெள்கி!

என்றல்லவா பாட்டு முடிகிறது?



68. ஒருவருக்கு அமுது: ஒருவருக்கு நஞ்சு!

தன் யாத்திரைக் கதையை விவரமாய்ச் சொல்லி முடித்த அனுமன் வானரர்களுடன் ஆலோசனை செய்தான். 'நடந்த காரியங்களைத் தெரிவித்தேன். நாம் சீதையுடன் ராமலட்சுமணர்களைப் பார்க்க வேண்டுமென்று ஜாம்பவானும் மற்றப் பெரியோர்களும் முடிவு செய்தால் எனக்கு ஆட்சேபம் இல்லை. நான் ஒருவனே இலங்கையையும் ராவணனையும் சகல அரக்கர்களையும் ஒரு கணத்தில் நாசம் செய்வேன். உங்களுடன் சேர்ந்தால் கேட்க வேண்டுமோ?' என்றெல்லாம் சொன்னான்.

ஏதோ தற்பெருமையாக அனுமன் பேசி விட்டானென்று தான் கருத வேண்டுமென்பதில்லை. அதே உத்ஸாகத்துடன் ஜாம்பவான், அங்கதன் முதலான வீரர்களையும் புகழ்ந்து விட்டு அவர்களுடைய ஆலோசனைக்கு இணங்கி நடப்பதாகக் கூறி முடித்தான்.

அதற்கு அங்கதன், 'ஜானகியை அழைத்துக் கொண்டே ராமனிடம் போவோம்!' என்று பதில் சொன்னான். அப்போது பெருங் கிழவனான ஜாம்பவான் அங்கதனை நோக்கி, 'குழந்தாய், நீ சொல்லும் ஆலோசனை நன்றாகத்தானிருக்கிறது. ஆனால் ராமனுடைய கருத்தை ஒத்து அவன் உத்தேசித்த காரியம் கெட்டுப் போகாமல் நாம் நடந்து கொள்ளவேண்டாமா?' என்றான்.

வால்மீகியின் மதுவனக் கதை

ஜாம்பவானுடைய வார்த்தையை அனுமனும் அங்கதனும் பிறரும் யுக்தமென்று அங்கீகரித்தார்கள். பிறகு அவர்களெல்லாரும் மிக்க மகிழ்ச்சியுடன் மகேந்திர மலையிலிருந்து கிளம்பி வானவீதியாகச் சென்றார்கள். வெகு தூரம் சென்றபின் மரங்களாலும் கொடிகளாலும் விளங்கும் ஒரு வனத்தைக் கண்டார்கள்.

சுக்கிரீவனுடைய மதுவனம், அவனுடைய மாமனாகிய ததிமுகனது பாதுகாப்பில் இருந்தது. அதைக் கண்டதும் வானரக் குழுவினர் அங்கதனை நோக்கி, 'இங்கே இருக்கும் தேனைக் குடிக்கும்படி எங்களுக்கு அனுமதி தர வேண்டும்' என்று பிரார்த்தித்தனர்.

அங்கதனும் ஜாம்பவான் முதலியவர்களைக் கலந்து ஆலோசித்து விட்டு, 'நீங்கள் அப்படியே உங்கள் இஷ்டப்படி தேனைக் குடிக்கலாம்' என்று அனுமதி கொடுத்தான். அது கேட்ட வானரர்கள் குதித்தார்கள்; பாடினார்கள்; ஆடினார்கள்.

சிலர் விழுந்தார்கள், நமஸ்கரித்தார்கள்; சிலர் சிரித்தார்கள்; தாவினார்கள்; திரிந்தார்கள்; பிதற்றினார்கள். ஒருவரையொருவர் கட்டிக் கொண்டார்கள்; ஒருவர்மேல் ஒருவர் பாய்ந்தார்கள். சிலர் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

சிரித்துக் கொண்டிருந்தவனிடம் ஒருவன் அழுதுகொண்டு போனான். அவனிடம் ஒருவன் அதிகாரம் செய்து கொண்டு போனான். அவனைப் பார்த்து வேறொருவன் இரைச்சலிட்டான். அந்த வானரப் படையிலே மதுபானத்தால் மயங்காதவன் இல்லை.

அவர்கள் மரங்களை முறித்து இலைகளை உதிர்த்துப் பூக்களைப் பறித்து மது

3—1810



வைக் குடித்து வனத்தை அழிப்பதைத் ததிமுகன் பார்த்துத் தடுக்க முயன்றான். பெரிய பெரிய வானர வீரர்கள் விரட்டியும் ததிமுகன் சிலரை நல்ல வார்த்தைகளாலும், சிலரைக் கடுஞ் சொற்களாலும் தடுத்துப் பார்த்தான். வானரர்களோ குடியாலும் கொழுப்பாலும் சுக்கிரீவ பயத்தையும் மறந்து, ததிமுகன் யஜமானனுடைய மாமன் என்பதையும் லட்சியம் செய்யாமல் அடித்தும் கடித்தும் உதைத்தும் அவனை அவமானப் படுத்தி விட்டார்கள்.

அப்போது அனுமன், 'நீங்கள் கவலைப் படாமல் தேனைக் குடிக்கலாம்; தடுப்பவர்களை நான் கவனித்துக் கொள்கிறேன்' என்று அந்த வானரர்களை உத்ஸாகப் படுத்தினான். அனுமனுக்கு ஆதரவளித்தான் அங்கதனும்.

வானரர்களெல்லோரும் இறுமாப்புற்றுக் காவற்காரர்களை அடித்துத் துரத்தி விட்டு ஒருவரோடொருவர் போட்டியிட்டுப் பழங்களைப் பறித்துப் புசிப்பதும், தேனைப் பருகுவதுமாய்ப் பைத்தியம் பிடித்தவர்களைப் போல், சந்தோஷம் தாங்காததுபோல், கூச்சலிட்டார்கள். ததிமுகன் தன் வேலைக்காரர்களை நோக்கி, 'இந்தத் துஷ்டர்கள் இங்கே இருக்கட்டும். நாம் சுக்கிரீவ மகாராஜாவும் ராமனும் இருக்குமிடம் போவோம். அங்கதன் மீது குற்றம் சுமத்துவோம். இந்த மதுவனம் சுக்கிரீவனுக்கு மிகவும் பிரியமானது. எனவே, அவன் கோபங் கொண்டு இவர்களை நிச்சயமாய்க் கொன்று விடுவான். நம்மை இப்படி அவமானம் செய்தது வீண் போகுமா?' என்றான்.


பிறகு அங்கிருந்து அதி வேகமாய்த் ததிமுகன் காவற்காரர்களுடன் கிளம்பி ஆகாய மார்க்கமாகச் சென்று சுக்கிரீவனை அடைந்து அவன் அடிகளில் வணங்கினான். ததிமுகனைக் கண்டதும் சுக்கிரீவன், 'என்ன அனர்த்தம் நேர்ந்ததோ!' என்று கவலையுற்றான்.

மதுவனத்திலே கொட்டமடித்து வானரர்கள் அழிவு வேலையில் நுழைந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டதும், சுக்கிரீவன் லட்சுமணனை நோக்கி, 'போன காரியத்தை முடித்துக்கொண்டு—அதாவது சீதையைக் கண்டு பிடித்தவர்களாய்—வானரர்கள் திரும்பி யிருக்

கிறார்கள்!' என்று செய்தி சொன்னான். 'அடங்காத மகிழ்ச்சியே மது வனத்தை அழித்திருக்கிறது' என்று சுக்கிரீவன் யூகித்துக்கொண்டான்.

அடிபட்டு வந்திருக்கும் ததிமுகனைக் குறித்து, 'லட்சுமணா, அந்தச் சந்தோஷ சமாசாரத்தை நமக்குச் சொல்லத்தான் இந்த வானரவீரன் இங்கே வந்திருக்கிறான்' என்றான். சுக்கிரீவனுடைய வார்த்தைகள் ராம லட்சுமணருடைய செவியில் அமிர்த தாரை போல் விழுந்தன.

கடைசியாகச் சுக்கிரீவன் ததிமுகனை நோக்கி மகிழ்ச்சியுடன், 'மாமா, அந்த



வானரர்களின் செயல் எனக்குத் திருப்தியே! அவர்களைப் பார்க்க நானும் ராமலட்சுமணர்களும் ஆவலாயிருக்கிறோம்' என்று சொல்லி அனுப்பி விட்டான். ததிமுகனுக்கு இப்போது தான் விஷயம் புரிந்தது.

இவன் மதுவனத்திலே திரும்பி வந்து குதிப்பதற்குள் அங்கேயிருந்த வானரர்களுக்கும் மயக்கம் தெளிந்து விட்டது; குடித்த மது ஜீர்ணமாகி விட்டது.

ததிமுகன் அங்கதனைப் பார்த்து, 'குழந்தாய், நீ யுவராஜா; எங்களுக்குப் பிரபு. நீயும் மற்ற வானர வீரர்களும் இங்கே பிரவேசித்து இஷ்டப்படி சஞ்சரிப்பதைக் கேள்விப்பட்டும் உன் சிற்றப்பன் கோபித்துக்கொள்ள வில்லை; மிகவும் மகிழ்ந்து போனான்' என்றான். சகல வானரர்களையும் அதி சீக்கிரமாய்த் தன்னிடம் அனுப்பி வைக்க வேண்டியதென்று சுக்கிரீவன் தன்னிடம் கட்டளையிட்டதாகவும் ததிமுகன் சொல்லி முடித்தான்.

பிறகுதான், 'கட்டளையிடப் பெற்ற காரியத்தை முடித்து விட்ட நாம் இங்கே தங்குவது யுக்தமல்ல' என்பது புலப்படுகிறது அங்கதனுக்கு. எல்லாரும், 'மகாராஜாவிடம் போகத் தயார்' என்றனர். உடனே எல்லாரும் ஆகாசத்தில் கிளம்பி அங்கதனைத் தொடர்ந்து போனார்கள்.

இனிமேல்தான் அனுமன் 'கண்டேன் சீதையை' என்று சீதையின் விருத்தாந்தம் கூறப் போகிறான். அதற்கு முன் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தான், ராமனை மட்டுமல்ல, ராம லட்சுமணரை மட்டுமல்ல, சுக்கிரீவ மகாராஜாவையும்

தான். அப்பால் அனுமன் சீதையிருக்கும் திசையைப் பார்த்து மிக்க பக்தியுடன் நமஸ்கரித்துச் சீதையின் விருத்தாந்தத்தை வெகு சாதுரியமாய்ச் சொல்லத் தொடங்குகிறான் என்பது வால்மீகி கதை.

இந்த மதுவன விருத்தாந்தம் நான்கு ஸர்க்கங்களில் சொல்லப் பட்டிருந்த போதிலும், கதை ரஸமாகவே செல்லுகிறது. இது வால்மீகி சுந்தரகாண்டத்தின் இறுதியில் வாசகர் உள்ளத்தைக் களைப்பாற்றும் காட்சி. ஒரு வகை நகைச் சுவைக் காட்சிபோல் ஆதி காவியக் கலைப்பண்பிற் கிசையவே அமைந்திருக்கிறது.

கம்ப சித்திரம் வேறு

கம்பன் காவியத்திலோ, அனுமன் செய்த போர்களுக்கிடையே ஹாஸ்யக் காட்சிகள் தோன்றி அலுப்பிற்கு அருவி நீராட்டமாகின்றன. அனுமன் ராவணனிடம் தூது சொல்லும்போது, வாலியின் க்ஷேமத்தை ராவணன் வினவ அனுமன் கூறும் அந்த விடையும் ஒரு ஹாஸ்யச் சிற்றருவியாகி வாசகருள்ளத்தை இளைப்பாறச் செய்கிறது.

எனவே 'திருவடி தொழுத படல'த்தில் வேகமாகவும் கம்பீரமாகவும் சௌந்தரிய சிகரத்தை அடையும் போது, மதுவனக் கதை போன்ற ஒரு நகைச் சுவைக் காட்சி குறுக்கிடுவது அவசிய மில்லை யென்றே கம்பனது கவியுள்ளமும் கலைப் பண்பும் தீர்மானித்திருக்க வேண்டும்.

ஆனால் சாதாரணமான கம்பராமாயணப் பதிப்புக்களிலும் ஏடுகளிலும் கூட மதுவனக் கதை புகுந்து ஆர்ப்பாடம் செய்து கொண்டு தானிருக்கிறது; கம்ப-ரஸிகர்களுக்கு மயக்கம் விளைவித்துக் கொண்டு தான் இருக்கிறது.

> போவது புலமை
> யென்னப் பொருக்கென
> எழுந்து போனார்

என்று அனுமனும் வானர வீரர்களும் அவ்வளவு அவசரமாய் அந்த இடம் விட்டுப் புறப்பட்டும், அப்படியே குறித்த இடம் போய்ச் சேராமல் மதுவனத்திலே முகாம் போடுகிறார்களாம்.

இங்கே பதினேழு பாடல்கள் குறுக்கிடுகின்றன, வானர வீரர்களுக்கு மது பான விருந்து செய்வதற்காக. ஆனால் வாசகர்களுக்கோ...? மதுவனம் பட்டபாடன்றோ படுகின்றன மதி வளமும் ரஸிக உணர்வும்!

சீதையைப் பிரிந்த சோகத்தால் ராமன் மூர்ச்சிக்குந்தோறும் சுக்கிரீவ நண்பனின் வார்த்தை எப்படித் தோன்றுகிறது என்பதை வருணிக்கின்ற செய்யுளுக்கு வந்து சேர்ந்து,

> சோர்தொறும் சோர்தொறும்
> உயிர்த்துத் தோன்றினன்

என்று படிக்கும்போது தான் நமக்கும் சோர்வு போகிறது; மீண்டும் உயிர்த்துத் தோன்றுகிறது ரஸிக உணர்வு.

இந்த நிலையில் ஏழு பாடல்கள். நம்பிக்கையால் ராமன் உயிர் வைத்திருப்பதையும், தென் திசையில் தேடச் சென்றவர்களைக் குறித்து ராமன் கவலைப் படுவதையும் வருணிக்கின்றன. இதன் தொடர்ச்சியாக இசைந்து வருவது, அனுமன் வரவை வெளியிடும் கவிதான்.

ஆனால் இடையே மீண்டும் செருகப் பட்டிருக்கின்றன பதினெட்டுப் பாடல்கள். இங்கேதான் அங்கதன் குத்திய குத்தினால் இரத்தம் சொட்டத் ததிமுகன் சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்த வைபவம் வருகின்றது.

இந்த விதமாகச் சுவை வறண்ட பாலைவனப் பாடல்கள் முப்பத்தைந்தும் நம் பொறுமையைச் சோதித்துப் பார்க்கின்றன. கம்ப ராமாயணத்தில் நயங்களைக் காட்டிலும் நீளத்தை நினைவூட்டும் பாடல்கள் இவை!

தமக்குக் கிடைத்த ஒரு பழைய ஏட்டுப் பிரதி ஒன்றிலே மதுவன அழிவு குறுக்கிடும் பல செய்யுள்களும் காணப் பட வில்லை யென்றும், ததிமுகன் சரிதையே காணப்பட வில்லை யென்றும், ஸ்ரீ கோபாலகிருஷ்ண மாசாரியார் தமது சுந்தர காண்ட உரை — நான்காம் பதிப்பில் கூறுவதும் கவனிக்கத் தக்கது.

இடைச் செருகல் குறித்துக் 'கம்பர் காவியம் — அதன் நிலை விளக்கம்' என்ற புத்தகத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் ஸாராம்சத்திலே ஒரு சிறந்த கம்ப-ரஸிகரின் நடுநிலை விளக்கமாகவே தோன்றுகின்றன. இந்த ஆசிரியரின் முயற்சியால் இன்று கிடைக்கக் கூடிய நல்ல பாடங்கள் உள்ள ஓர் இன்கவித் திரட்டு வெளி வந்தால், ஆராய்ச்சிப் பதிப்பாகிய முழுப் பதிப்பு வரும்வரை அது வாசகர்களுக்கு ஆறுதலும் ஆனந்தமும் அளிக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

சுந்தர ராமாயணம்

பி. ஸ்ரீ

69 வால்மீகத்தில் ‘சிறையிருந்தவள் ஏற்றம்’

ததிமுகனைக் காயத்தோடு கண்டதும் சுக்கிரீவன் ராமலட்சுமணர்களைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தானல்லவா? எனினும் ‘அங்கதன் முதலானவர்கள் வருவதற்குத் தாமதம் ஏற்பட்டதால் ராமனுடைய செந்தாமரைக் கண்கள் துக்கத்தால் கலங்கின’ என்றும், அது கண்ட சுக்கிரீவன் மனத்தைச் சமாதானம் செய்துகொள்ளும்படி ராமனை மறுபடியும் வேண்டிக் கொண்டானென்றும் வால்மீகி கூறுகிறார்.

‘சீதை கண்டு பிடிக்கப் பட்டாளென்பதில் ஐயமில்லை. காரியசித்தி பெறாமல் துக்கப் பட்டுக் கொண்டிருக்கும் அங்கதன் மதுவனத்தை அழிக்கத் துணிவானா?’ என்கிறான் சுக்கிரீவன். அனுமனே சீதையைக் கண்டு பிடித்திருக்க வேண்டும் என்று கூட ஊகிக்கிறான்.

‘ஆலோசனை சொல்லுகிறவன் ஜாம்பவானாகவும், படைத்தலைவன் அங்கதனாகவும், ரட்சகன் அனுமனாகவும் இருக்கும்போது காரியம் வேறுவிதமாக முடியுமா?’ என்றெல்லாம் சமாதானப் படுத்துகிறான் சுக்கிரீவன்.

இதற்குள் தெற்கே தேடப்போனவர்கள் அனுமனது காரியசித்தியால் செருக்குற்றவர்களாய் வான வீதியில் வரும்போதே ‘கிலுகிலு’ என்று சத்தம் போடத் தொடங்கினார்கள். உடனே வளைந்து கிடந்த தன் நீண்ட வாலை நீட்டிச் சுழற்றி மகிழ்ச்சியுடன் விளங்குகிறானாம் சுக்கிரீவன்.

அப்போது அந்த வானரர்கள் அங்கதனையும் அனுமனையும் முன்னிட்டுக் கொண்டு அங்கே வந்து சேர்ந்து, சுக்கிரீவனும் ராமலட்சுமணர்களும் இருக்கும் இடத்திலே பூமியில் குதிக்கிறார்கள்.

பிறகு அனுமன் சுக்கிரீவ மகாராஜாவுக்கும் ராம லட்சுமணருக்கும் முடி தாழ்த்தி வணக்கஞ் செலுத்தி விட்டு ராமனை நோக்கி, ‘கண்டேன் சீதையை; யாதொரு அபாயமும் இல்லாமல் கற்பு நியமத்தை முற்றும் அனுஷ்டித்துக் கொண்டிருக்கிறாள்’ என்று சுருக்கமாய் விண்ணப்பம் செய்கிறான்.

சுக்கிரீவனும் லட்சுமணனும் அனுமனைப் பிரீதியுடனும் வெகு கௌரவத்துடனும் கண்கொட்டாமல் பார்க்கிறார்கள். ராமன் அனுமனைக் குளிரக் கடாட்சித்த அந்த எல்லையில்லா ஆனந்த நோக்குடன் இந்த ஸர்க்கம் முடிவு பெறுகிறது.

கம்ப ராமாயணத்திலோ, ராமன் தென் திசை சென்ற வானரரைக் குறித்துத் தன் மனத்திலே தோன்றுவன கூறிச் சுக்கிரீவனை வினவிக் கொண்டிருக்கும் போதே, காரிய சித்தியால் எய்தப் பெற்ற முகப் பொலிவுடன் ராமனிடம் அப்பெரு மகிழ்ச்சிக்குரிய செய்தியை வெளியிடப் போகிறோமே என்னும் குதூகலத்தால் ஏற்பட்ட தேஜஸும், அனுமனைத் தெற்கே ஒரு சூரியோதயம் போலக் காட்டி விடுகிறது, ராமனுடைய அன்பு நிறைந்த சிந்தைக்கும் கண்களுக்கும்:

என்புழி அனுமனும்
  இரவி என்பவன்

தென்புறத்(து) உளன்எனத்
  தெரிவ தாயினான்;

பொன்பொழி தடக்கைஅப்
  பொருவில் வீரனும்

அன்புறு சிந்தையன்
  அமைய நோக்கினான்.

[என்புழி—என்று வினவும் பொழுது. இரவி – சூரியன். பொன்பொழி

தடக்கை-அழகு பொழிகின்ற பெரிய கை. பொருவில் வீரன்-போர் செய்தற்குரிய வில்லையுடைய வீரன்.]

சுக்கிரீவனும் லட்சுமணனும் அனுமனைக் கௌரவித்து அன்புறு சிந்தையராய்க் கண் கொட்டாமல் பார்த்தது இங்கே சொல்லப் படவில்லை. அழகு பொழிகின்ற ஆஜானுபாகு அந்த ரீண்டையில் விஜய கோதண்டத்துடனும் அன்பொளி நிறைந்த கண்களுடனும் அமைதியாகச் செவ்வையாக அனுமனைப் பார்க்கும் அந்தப் பார்வையை மட்டும் கவிஞன் வற்புறுத்துவது கவனிக்கத் தக்கது.

அனுமன் சொல்லும் சீதை கதை

இனி, ஸீதா விருத்தாந்தம் நான்கு ஸர்க்கங்களில் கூறப்படுவதுடன் வால்மீகி சுந்தர காண்டம் முற்றுப் பெறுகிறது. சீதை சிறைப் பட்டிருப்பதையும், அரக்கர்களால் மிரட்டப்படுவதையும், ராமனிடம் மாறாத நம்பிக்கை வைத்திருப்பதையும், ராவணன் கெடு வைத்திருப்பதையும், அந்த வானரர்கள் எல்லோரும் ராமனிடம் சொல்ல ஆரம்பித்ததாக முனிவர் தெரிவிக்கிறார்.

சீதையைப் பற்றிய விவரங்களை விஸ்தாரமாகச் சொல்லுங்களென்று ராமன் கட்டளையிட்ட பிறகு தான், அந்த வானரர்கள் நேரில் பார்த்து அந்த அனுமனைப் பேசும்படி தூண்டி விடுகிறார்கள். அப்பொழுது அனுமன் சீதையிருக்கும் திசையை நோக்கி வெகு பக்தியுடன் வணங்கி அந்த விருத்தாந்தத்தை வெகு சாதுரியமாகச் சொல்லத் தொடங்குகிறான்.

தான் இங்கிருந்து புறப்பட்டுக் கடலைத் தாண்டிப் போனதையும், இலங்கையில் ஓரிடம் பாக்கி யில்லாமல் பார்த்ததையும், கடைசியாக அசோக வனத்தில் அரக்கியரால் சூழப்பட்டு அவர்களுடைய குரூர வார்த்தைகளையும் ஹிம்ஸையையும் பொறுத்துக் கொண்டு ராமனிடம் மாறாத ப்ரீதி



வைத்திருக்கின்ற நிலையில் சீதாதேவியைக் கண்டதையும், அனுமன் சொல்லுகிறான்.

துக்க சமுத்திரத்தில் முழுகிக் கரை காணாமலிருப்பவளைக் கண்டேன் என்கிறான். 'இனி உயிரை வைத்துக் கொள்வதில்லை யென்று நிச்சயித்திருக்கும் போது நான் அவளைக் கண்டேன்' என்கிறான்.

'இட்சுவாகு வம்சத்தின் மகிமையை நான் வர்ணித்தது கேட்டு அவளுக்கு என்னிடம் மெள்ள மெள்ள நம்பிக்கை பிறந்தது' என்கிறான். ராம சுக்கிரீவ சிநேகம் குறித்து அவள் மிகவும் மகிழ்வுற்றதாகவும் சொல்லுகிறான்.

சீதையின் உக்கிரமான தவத்தையும் நிகரில்லாத பக்தியையும் குறிப்பிடுகிறான். சித்திர கூடத்தில் நிகழ்ந்த காகாசுர விருத்தாந்தத்தை அவள் அடையாளமாகச் சொன்னதாகவும் தெரிவிக்கிறான்.

தண்டகாரணியத்தில் வசிக்கும்போது ஒரு சமயம் சீதையின் திலகம் அழிந்து போக, ராமன் ஒருவகைக் காவிப் பொடியால் அவள் நெற்றியில் திலகம் வைத்ததையும் அடையாளமாக நினைவூட்டுகிறான்.

பிறகு, சீதை அனுப்பி வைத்த சூடாமணியைக் குறித்துப் பிரஸ்தாபிக்கிறான். 'நான் இதுவரை வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வந்தேன். துக்கப் படும்போது தங்களைப் பார்ப்பது போல் இதைப் பார்த்து ஆறுதல் அடைந்தேன். இப்பொழுது இதையும் அனுப்பி விட்டேன். நான் இன்னும் ஒரு மாதம் தான் பிழைத்திருப்பேன்' என்று சீதை சொன்னதாகச் சொல்லி, அந்தச் சூடாமணியையும் ரகுநாதனிடம் வணக்கமாய்ச் சமர்ப்பிக்கிறான்.

சூடாமணியைக் கண்டு ரகுவீரன் அடைந்த நிலை அடுத்த ஸர்க்கத்தில் வருணிக்கப்படுகிறது. அதை மார்போடு அணைத்துக் கொள்கிறான். அடங்காத பிரீதியுடன் அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே துக்கம்



மேலிட்டுக் கண்களைக் கண்ணீர் மறைக்கிறது.

அந்த நிலையில் சூடாமணியைப் பார்க்க முடியாமல் சுக்கிரீவனை நோக்கி, 'தோழா, என் விவாக காலத்திலே என் தந்தையார் என் மாமனாரிடமிருந்து இதை வாங்கிச் சீதையின் தலையில் வைத்து அலங்கரிக்கும்படி கொடுத்தார். சீதையின் தாய் (ஜனகன் தேவி; சீதையின் சொந்தத் தாய் பூமித்தாய் தானே!) இதைச் சூட்டினாள். சூட்டியதும் இந்த அணி அப்போது முன்னிலும் அதிகமாய்ப் பிரகாசித்தது' என்கிறான்.

சூடாமணியைப் பார்த்தவுடன் சீதையையே அடைந்தது போல் நினைப்பதாகச் சொல்லி விட்டு, 'இந்த அணியை மாத்திரம் இப்பொழுது சீதை இல்லாமல் பார்க்க நேர்ந்ததே! இதை விடக் கஷ்டம் உண்டோ!' என்று துக்கிக்கவும் செய்கிறான்.

'சீதை ஒரு மாதம் வரை ஜீவித்திருப்பாளென்றால் அவள் தீர்க்காயுசு உள்ளவள்!' என்றே நம்புகிறான் ராமன். 'சீதை என்ன சொன்னாள்? அதை நிஜமாகச் சொல்லு; அடிக்கடி அதைச் சொல்லு' என்று மிகவும் தீனமாய்க் கேட்கிறான்.

இதற்கு அடுத்த அறுபத்தேழாவது ஸர்க்கத்திலும் சீதையின் விருத்தாந்தம் தொடர்கின்றது, 'அனுமன் சீதையின் சகல விருத்தாந்தங்களையும் சொல்லத் தொடங்கினான்' என்ற பீடிகையுடன்.

போரில் ராமனுக்கு எதிரே யாரும் நிற்க முடியாது என்பது லோகப் பிரசித்தமானதால், தன்னை மறுபடியும் அடைய வேண்டுமென்ற கவலை கொஞ்சமாவது இருந்தால் ராவணனைக் கூர்மையான பாணங்களால் கொல்லட்டும் என்று சீதை வழியும் கண்ணீருடன் சொல்லியனுப்பியதாக அனுமன் தெரிவிக்கிறான். 'தம்பியாவது தமையனாரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு ஏன் என்னைக் காப்பாற்ற வரவில்லை?' என்று சீதை கேட்டதாகவும் சொல்லுகிறான்.

அதற்கெல்லாம் தக்கபடி பதில் சொல்லி விட்டதாகவும் அனுமன் தெரிவிக்கிறான். அது கேட்டுச் சமாதானமடைந்த சீதை தன் வஸ்திரத்திலிருந்து சூடாமணியை எடுத்துத் தன்னிடம் கொடுத்ததாகச் சொல்லுகிறான்.

தான் அவளை வணங்கி இங்கே புறப்படத் தயாரானதும் அவள் மறுபடியும்

கண்ணீரால் நனைந்த முகத்துடன் சோகம் தாங்காமல், 'ஆஞ்சநேய, இந்தத் துக்க சமுத்திரத்திலிருந்து ராகவன் என்னைக் கரையேற்றுமாறு செய்வது உன் கடமை' என்று சொன்னதாகவும் தெரிவிக்கிறான். சீதை பூர்ணமான க்ஷேமத்தை அடையுமாறு ராமன் திருவுள்ளம் பற்ற வேண்டும் என்பதாக இந்த ஸர்க்கம் முடிவுறுகின்றது.

கடைசி ஸர்க்கத்திலே, 'நீ போய் விட்டால், திரும்பி வருவாயென்று நான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே என் பிராணன் போனாலும் போய் விடும்' என்று சீதை சொன்னதாகவும் அனுமன் தெரிவிக்கிறான். ராம லட்சுமணர்களால் சமுத்திரத்தை எப்படித் தாண்ட முடியும் என்ற சந்தேகமும் சீதையுள்ளத்தில் குடி கொண்டு உபத்திரவிக்கிறதாம்.

'பிரதாப லங்கேச்வரனை வென்று என்னை அழைத்துப் போக நீ ஒருவனே போதும். மகா பராக்கிரமசாலியான உனக்கு இது சிறப்பான புகழைத் தரும். ஆனால் அவர் வந்து வெற்றி பெற்று என்னை அழைத்துப் போனால், அது அவருடைய குலத்திற்கும் பராக்கிரமத்திற்கும் கீர்த்திக்கும் அழகு. அந்தக் காரியத்தை அப்படி நீ நிறைவேறச் செய்ய வேண்டும்' என்று சீதை சொன்னதாக அனுமன் விவரமாய்த் தெரிவிக்கிறான்.

ராமன் இல்லாத வேளையில் திருடனைப் போல் ராவணன் தன்னை எடுத்து வந்ததையும் ஞாபகப்படுத்தி, இலங்கையிலிருந்து ராவணனுக்குத் தெரியாமல் அனுமன் இரகசியமாய்த் தன்னை அழைத்துப் போவது ராமனுக்குத் தகாது என்று சீதை சொன்னதாகவும் சொல்லுகிறான். அதனால் தான் சீதையைக் கண்டு பிடித்தவன் அவளையும் அழைத்துக் கொண்டு வராமல் சூடாமணியுடன் திரும்ப நேர்ந்தது என்பது குறிப்பு.

கடைசியாக, அனுமன் சீதையிடம் சுக்கிரீவ மகாராஜாவின் வானரப் படைகளின் பெருமையையும் வற்புறுத்துகிறான். மற்ற வானர வீரர்கள் தனக்குச் சமானமானவர்கள் அல்லது மேலானவர்கள் என்று கூடச் சொல்லி விட்டானாம்.

'எனக்குத் தாழ்ந்தவன் அங்கே ஒருவனும் இல்லை. ஆகையால் கவலையை விடுங்கள்' என்று சீதையிடம் கூறியது வீரப் பேச்சு மட்டுமல்ல; சீதைக்குத் தைரியம் அளிக்கும் பேச்சும் கூட.

'ஸ்ரீ ரகுவீரன் சத்துரு நாசம் செய்து வனவாசத்தை முடித்துக் கொண்டு போய்த் தேவியுடன் அயோத்தியில் ராஜ்யாபிஷேகம் செய்து கொள்வதையும் மகா பாக்கியசாலியான தாங்கள் அதி சீக்கிரம் பார்க்கப் போகிறீர்கள்' என்று அந்த முடிசூட்டு விழா வைபவத்தையும் சீதையின் மனக்கண்முன் தோற்றுவித்தானும் இந்தச் சொல்லின் செல்வன். இதைக் கேள்விப்பட்டதும் சீதையைப் பற்றிய கவலை ராமனுக்கு எதற்காக?

அப்படியெல்லாம் 'கம்பீரமாயும் மங்களகரமாயும் நான் சொன்னதைக் கேட்டு ஜனகராஜ புத்திரி மனந் தெளிந்து ஆறுதல் அடைந்தாள்' என்று அனுமன் சொல்லி முடிப்பதுடன் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் சுந்தரகாண்டம் முற்றுப் பெறுகின்றது.

'இவ்விதம் ஆதியில் குசலவர்களால் ஸ்ரீராம சந்நிதியில் அசுவமேத யாகசாலையில் கானம்செய்யப்பெற்ற ஸ்ரீமத் ராமாயணத்திலே பத்தொன்பதாவது தினத்துக் கதை முடிவு பெற்றது' என்று தெரிந்து கொண்டதும், கம்பீரமாகவும் மங்களகரமாகவும் கதை சொல்வதில் ஸ்ரீ வால்மீகி பகவான் நிகரற்றவர் என்ற உணர்ச்சி நமக்கு உறுதிப்படுகிறதல்லவா?

'ஸீதாலக்ஷ்மண பரத சத்ருக்ந ஹநுமத் ஸமேத ஸ்ரீராமசந்த்ர பரப்ரஹ்மணே நம:' என்று பக்தர்கள் இந்தச் சுந்தர காண்ட பாராயணத்தை முடித்துக் கொள்வது ஒருவகை மரபு.

எனினும் ராமாயணம் பக்தி இலக்கியமாக வளர்ச்சி பெற்றதெல்லாம் வால்மீகிக்குப் பிற்காலத்திலே தான்.

ஸ்ரீ ராமாவதாரமாக ஸ்ரீமத் ராமாயணம் நிலைபெற்றுவிட்டது தமிழ் நாட்டில், ஆழ்வார்கள் காலத்திலே. 'சிறையிருந்தவள் ஏற்றம்' ஆகிவிட்டது ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரியர்களின் காலத்திலே.

'இராமாயணம் என்னும் பர்தி வெள்ளம் குடிகொண்ட கோயிலா'க விளங்கினார் ராமானுஜர் என்பர். பக்தி வெள்ளம் குடி கொண்ட காவியப்பூங்கோயில் கம்பன் பாடிய ராம கதை, கம்பன் கண்ட ராமாவதாரம்.

கம்பனுடைய பக்தி கவிதையுள்ளத்திலே ஊறிக் கனிந்து அபூர்வ சௌந்தரியம் பெற்றிருக்கிறது. இனி, இத்தகைய பக்தியுடன் வால்மீகி கூறிய சீதா விருத்தாந்தத்தைக் கம்பன் எப்படி மாற்றி அமைக்கிறான் என்று பார்க்கலாம்.

சுந்தர ராமாயணம்

பி. ஸ்ரீ

70. ஸ்தூல சூட்சும அழகு

வால்மீகி கூறும் சீதா விருத்தாந்தம், கம்பனது கலாமோகினியால் சுந்தரகாண்டத்தின் சௌந்தரிய சிகரமாகக் காட்டப்படுகிறது. அங்கே அனுமன் பேசுவது, தான் சீதையைத் தேடிக் கண்டுபிடித்த கதை. இங்கே அனுமன் பேசுகிறானா, என்ன? பாடிக் காட்டுகிறான், ஆடிக் காட்டுகிறான் ஓர் ஆனந்த நாடகத்தை.

குணசௌந்தரிய மாகாத்மியம்

சீதா விருத்தாந்தத்திலே முதன் முதல் புலப்படுவது கடல் தாண்டிச் சீதையைத் தேடிக் கண்டு பிடித்த சாமர்த்தியம். இதையடுத்துச் சீதையின் குணாதிசயமும் வெளிப்படுகிறது என்பதில் ஐயமில்லை.

சீதையின் சகல விருத்தாந்தங்களையும் விவரமாய்க் கூறும்போதும், அனுமனுடைய பேராண்மைக்கு இசைந்த பேரறிவு எப்படியெல்லாம் சீதையைத் தேற்றியிருக்கிறது என்பது அதிக அளவில் புலனாகிறது. விருத்தாந்தத்தின் தொடக்கம் போல் இறுதியும், அனுமனுடைய கம்பீரம் வாய்ந்த அறிவுச் செல்வத்துடனும் சொற் செல்வத்துடனும் தூக்கிக் காட்டுகிறது, மங்களமாக ஆறுதல் அடையும் ஜனகராஜ புத்திரியை. சீதா விருத்தாந்தத்தின் இடையிலும் அனுமனுடைய தூய தொண்டு துலங்கக் காண்கிறோம்.

கம்பன் கூறும் 'குணசௌந்தரிய மான்மிய'த்திலோ, சுவை மிக்க கறியமுதிலே அறிய மாறிக் கிடக்கும் உப்பைப் போல் கரைந்தும் சேர்ந்தும் இருக்கிறது அனுமனின் தொண்டு.

எடுத்த எடுப்பிலே, ராமனையே தெய்வமாகக் கொண்டிருந்த அனுமன் தன் பெருந் தெய்வத்தை அசோகவனச் சிறையில் கண்டு கொண்டதாகச் சொல்லுகிறான். அந்தத் தெய்வத்திற்கே தன் அறிவாற்றல்களையெல்லாம் அர்ப்பணித்து, 'ஆராதனை என் அறியாமை ஒன்றுமே!' என்று சொல்லாமல் சொல்லுகிறான்.

ஜனக குல சுந்தரியும் சக்ரவர்த்தியின் மருகியும் ஆகிய ராமபத்தினி பொறுமையில் பூமித் தாயையும் வென்று விடுகிறாள். அந்தக் குணாதிசயமே அனுமனின் தூது பயன்படக் காரணமாகிறது. சூர்யகுலப் பெருமைக்கும் ஜனக குலப் பெருமைக்கும் சோபை தருவது போல் அனுமனுடைய பெருமைக்கும் சோபை தருகிறது.

'நங்கையையா கண்டேன்? பொறுமை, கற்பு, நற்குடிப் பிறப்பு என்னும் குணங்களின் ஆனந்தக் கூத்தைத் தான் கண்டேன்!' என்று அனுமன் சொல்லுகிறான். அப்படிக் கண்டவனை நாம் முனைந்து நிற்கக் காணவில்லை, இந்தக் குண சௌந்தரிய நாடகத்திலே.

இசை மயமாய்ப் பொங்கி வெள்ளமிடுவது போல வருகின்றன இந்த மான்மியப் பாடல்கள். இந்த இசைப் பிரவாகத்தின் ஆழத்திலே இந்தச் சொல்லின் செல்வனுடைய பேராண்மையும் பேரறிவும் மூழ்கிக் கரைந்து போகின்றன, ராவணனையும் அஞ்சச் செய்த சீதையின் குணாதிசயம் தான் சக்தி மயமாகவும் வருணிக்கப்படுகிறது.

இந்தப் பிரபந்தத்திலே சிறை புகுந்த செல்வியின் சித்திரம் தான், 'சோகத்தாள்' ஆகிய நங்கையின் வெற்றிதான் பல கோணங்களிலிருந்து காட்டப் படுகிறது. இந்தப் படங்களைக் காட்டு

றவன் எங்கேயோ அசரீரி போலத் தான் மறைந்து நிற்கிறான்.

இந்தப் பிரபந்தத்தினிடையே, தான் அரக்கியரை மந்திரத்தால் உறங்கச் செய்து விட்டுச் சீதையின் தற்கொலை முயற்சியைத் தடுத்த வரலாறும் பிரஸ்தாபிக்கப் படுகிறது. இந்த இடத்திலும், சீதையின் தியாகப் பெருமையும் ராமநாம மகிமையும் கணையாழி புரிந்த இந்திர ஜால மகேந்திர ஜாலங்களும் சூடாமணியின் சிறப்பும், அநுமனுடைய பேரறிவுப் பெரும் பணியை முழக்கடித்து விடுகின்றன.

ரூபசௌந்தரிய மாகாத்மியம்

இனி இந்தக் குணசௌந்தரிய மான்மியத்தை ஆரணிய காண்டத்திலே வந்திருக்கும் சீதாதேவியின் ரூபசௌந்தரிய மான்மியத்துடன் கொஞ்சம் ஒப்பிட்டுப் பார்க்கலாம். அந்தப் பாடல்களும் ஓர் இசை நாடகம் போல் அமைந்திருக்கின்றன.

அங்கும் சப்த ஜாலங்களைப் பார்க்கிறோம்—அதாவது, சூர்ப்பணகை பாடும் அந்த ரூப சௌந்தரிய மான்மியத்திலே. இங்கே அநுமனுடைய வாக்கிலோ சப்தம் ஜால வித்தையா காட்டுகிறது?

மந்திரக் கவிதை ஏதோ ஒரு சூட்சும லோகத்திற்கு எப்படியோ நம்மைக் கொண்டு போய், 'அதோ பார் குண சௌந்தரியம் என்னும் விண்ணளாவிய இமயமேறி வீற்றிருக்கும் லட்சிய சுந்தரியை!' என்று காட்டி விடுகிறது.

இந்த இரண்டு பிரபந்தங்களும் பண் சுமந்த பாடல்கள். ஆனால் அநும



னுடைய குண சௌந்தரியப் பிரபந்தம் குறித்துப் 'பண்களையே சொற்களாக வடித்தெடுத்ததோ?' என்றும் சொல்லத் தோன்றுகிறது.

பொன்னிடம் தன் மேனியைப் பெற்றுக் கொண்டாளென்றும், மின்னலிடம் தன் இடையை இரவல் வாங்கிக் கொண்டாளென்றும், இள மூங்கிலிடம் வழவழப்பான மெல்லிய தோளை வாங்கிக் கொண்டாளென்றும் வருணிக்கின்ற சூர்ப்பணகை, 'கள்ளெனக் கனிந்த இன் சொற்'களைக் கவிதை வெறியிடம் கடனைப் பெற்று ராவணனுள்ளத்தைப் பகட்டுகிருள்.

'நீ செய்த குற்றம்தான் என்ன?' என்று கேட்ட அண்ணனிடம். 'அந்தக் குற்றம் பகுந்த காரணம் கேள்' என்று,

'மின்வயின் மருங்கு
கொண்டாள், வெய்வயின்
மென்றேள் கொண்டாள்,

பொன்வயின் மேனி
கொண்டாள் பொருட்டினுல்
புகுந்த' தென்ருள்.

[மின்வயின் – மின்னலிடத்து. வேய்–(இங்கே) இள மூங்கில்.]

'கொண்டாள், கொண்டாள், கொண்டாள்' என்று ஏதோ ஒரு ஜால வித்தைக்காரன் மணியடித்து வித்தை காட்டப் போவது போல் ஒரு பீடிகை போட்டுக் கொண்டு, ராவணனுடைய இருபது கண்களும் பிரமிக்கும்படி ஒரு கட்டழகியைத் தோற்றுவிக்க முயல்கிருள். மணியடிப்பிற்குப் பின் சற்று மௌனமாக இருந்து ராவணனுடைய அகத்திலும் முகத்திலும் 'ஆர்?' என்ற ஒரு பெரிய வினக்குறியைத் தோற்றுவிக்கிருள்.

'ஆர் அவள்?' என்று பத்து வாய்கள் கர்ஜித்ததும், அரக்கி, 'ஐய, ஆழ்ந்து கவனிக்க வேணும்' என்று அமைதியாகச் சொல்லிவிட்டு,

பாரவள் பாதம்
தீண்டப் பாக்கியம்
படைத்த தம்மா!

[பார் – பூமி.]

என்று முதன்முதல் பாதத்தைக் காட்டுகிருள், ஏதோ பாதாதிகேசமாய் வடிவையெல்லாம் காட்டப் போவது போல.

பாதத்தைச் சுட்டிக் காட்டியவள், புது மலர்களை நிறையச் சூட்டியிருக்கும் கூந்தலையும் காட்டுகிருள். இப்போது பொருளை மறந்து பண்ணழகை மட்டும் செவியால் பருகிப் பாருங்கள்:

காமர முரலும்
பாடல், கள்ளெனக்
கனிந்த இன்சொல்,

தேமலர் நிரந்த
கூந்தல்...

[காமரம் – வண்டு. தேமலர் நிரந்த – தேனுள்ள புது மலர்கள் நிறைந்த.]



இந்தப் பிரபந்தப் பகுதி ரீங்கார த்வனியில் ஆரம்பமாகின்றது. 'நான் அவள் அழகை எப்படிக் காட்டிக் கரையேறப் போகிறேன்?' என்று ஏங்குவது போன்ற நடிப்புக் குரலையும் கேட்கிறோம்.

இந்த அவையடக்கத்துடன் தொடங்கும் ரூப வருணனைப் பிரபந்தம் கொஞ்சிக் கொஞ்சிக் காட்டுகிறது அந்த ரூப சித்திரத்தை:

மஞ்சொக்கும் அளக
ஓதி; மழையொக்கும்
வடித்த கூந்தல்;

பஞ்சொக்கும் அடிகள்;
செய்ய பவளத்தின்
விரல்கள் ஐய!

[மஞ்சு - வானத்திலே பரந்த மேகம். அளக ஓதி - முன்நெற்றி ரோமம். மழை - (இங்கே) மழை பெய்யக் கால் இறங்கிய மேகம். வடித்த - வாரிவிட்ட. பஞ்சு - செம்பஞ்சு. செய்ய - சிவந்த.]

அந்தச் சித்திரமும் இந்தச் சித்திரமும்

அனுமனுடைய குண வருணனைப் பிரபந்தமோ, ஏதோ ஒரு பொன்யுகம் வரப் போகிற தென்று மணி யோலிப்பது போல் ஆரம்பமாகிறது,



"...சுத்த மோசம்டா நீ! நேத்து சாயங்திரம் ராவிடம், 'எங்கேயும் போகாதே, வீட்டிலேயே இரு' என்று சொல்லி விட்டு, வரவேயில்லையாமே!..."

"எனக்கு வீட்டிலே முக்கியமான வேலை இருந்தது...! அவன் வந்து தொண தொணன்னு பேச உட்கார்ந்து விடப் போருனேன்னுதான் இப்படிச் சொன்னேன்!"

கண்டனென் கற்பினுக்(கு)
அணியை

என்ற பீடிகையுடன்.

அனுமன் பேசுவது கொஞ்சும் தமிழில் அல்ல; பயபக்தியுடன் வேதம் ஓதுவது போல் ஓதுகிருன், குண சௌந்தரிய மான்மியத்தை.

சீதையின் சொல்லினிமையைக் குறிப்பிடும் போது சூர்ப்பணகை,

அஞ்சொற்கள் அமுதில்
அள்ளிக் கொண்டவள்

என்கிருள். அமுதத் தமிழை அள்ளிச் சொரிந்து அந்தக் 'கடலினும் பெரிய கண்க'ளையும் காட்டி விடுகிருள்.

மன்மதன் வெந்தது இந்தக் கண் களிலேதான்; ஈசனுரின் நெற்றிக் கண்ணில் அல்ல! — என்று ஒரு புதுமைப் புராணமும் விளம்புகிருள், புதிய தொரு சூத பௌராணிகர் போல.

'தேமலர் நிரந்த கூந்தல்' என்று காட்டினுள்: இதே கூந்தலழகி நீராடி ஈரம் புலர்த்தக் கூந்தலுக்கு அகிற்புகை ஊட்டியதும், அந்த நறு மணம் வீசுகின்ற இந்தப் பெண்ணின் கண்ணில் விழித்துத்தான் மன்மதன் அழிந்து தேய்ந்து அநங்கனுகி விட்டானும். அனுமனும் இந்த ரீதியில் புராணக் கதையை மாற்றிச் சீதையின் குண சௌந்தரியத்தைச் சிறப்பிக்கிருன். ஆனல் அவ்வளவு படாடோபமாக அல்ல.

சிவபெருமான் உமாதேவியைப் பெற்றிருப்பது போலவும், திருமால் திருமகளைப் பெற்றிருப்பது போலவும்,

சீதையைப் பெற்ருய்
நீயும்!

என்கிருள் சூர்ப்பணகை,

பாகத்தில் ஒருவன்
வைத்தான்; பங்கயத்—
திருந்த பொன்னை

ஆகத்தில் ஒருவன்
வைத்தான்; அந்தணன்
நாவில் வைத்தான்

[பங்கயத்து இருந்த பொன்னை — செந்தாமரை மலரில் இருந்த திருமகளை. ஆகத்தில் — மார்பில். அந்தணன் — பிரமன்.]

என்று கூறிவிட்டு, 'வீர, நீ சீதையைப் பெற்றால் எங்ஙனம் வைத்து வாழ்வாய்?' என்று கேட்கிறாள், அண்ணனை நோக்கி.

'நீ வாழ மாட்டாய்!' என்ற அமங்கல முற்குறியாக இது அமைவதுடன், 'தலைமேல் வைத்துக் கொள்ளத் தக்கவள் சீதை' என்ற குறிப்பையும் உணர்த்துகிறது.

அனுமன் வாக்காகிய குண சௌந்தரிய வருணனைப் பிரபந்தத்திலோ,

சோகத்தா ளாய
நங்கை

என்று சிறப்பிக்கப்படும் தேவியின் வெற்றியிலே பெண் குலத்தின் வெற்றி கண்டு சிவபெருமானும் திருமாலும் தங்கள் தேவியரைத் தலைமேல் வைத்துக் கொண்டாடுவதாக வருகிறது.

சூர்ப்பணகை பாடும் ரூப சௌந்தரியப் பிரபந்தம் வசீகரமாகப் படர்ந்து சென்று கண்ணைப் பறிக்கும் ஓர் அழகுக் கடலிலே சீதையைக் காட்டுகிறது. அனுமனோ,

கண்ணினீர்க் கடலிற்
கண்டேன்

என்கிறான், குண சௌந்தரிய சிகரத்தை.

சூர்ப்பணகை சீதையின் திவ்ய சௌந்தரியத்தை நேரில் கண்டே திகைத்துப் போனாள். அண்ணன்முன் அவயவ சௌந்தரியத்தை வருணிப்பது போலத் தொடங்கியவள்,

தோளையே சொல்லு—
கேனோ? சுடர்முகத்(து)
உலவு கின்ற
வாளையே சொல்லு
கேனோ?

என்றெல்லாம் திகைத்துப் போகிறாள்.

மீளவும் திகைப்ப
தல்லால் தனித்தனி
விளம்ப லாற்றேன்

என்று தோல்வியை ஒப்புக் கொள்கிறாள். இந்தத் தோல்வியே இவளுக்கு வெற்றிதான்!

சொல்லின் செல்வனாகிய அனுமனுக்கோ ஒருவகைத் திகைப்பும் இப்போது இல்லை. சௌந்தரிய சிகரமாகச் சீதையின் குண சௌந்தரியத்தைக் காட்டும் போதே, அந்த நிழலில் ஒதுங்கி மறைந்து விடுகிறான்.

ராமன் தாபம் தணிந்து மகிழ்கிறான். ராவணனோ தாபமுற்றுக் கலங்குகிறான். இருவருக்கும் ஒரே மறதி. அனுமனுக்கு நன்றி செலுத்தவும் மறந்து போகிறான் ராமன். ராவணனும் தங்கைக்கு நன்றி செலுத்தவில்லை; தங்கையையும், அவள் இழந்த மூக்கையும், அந்த மூக்கறுப்பு நிகழ்த்திய வீரத்தையும் எல்லாம் மறந்து விடுகிறான்!

இருவருக்கும் சீதையின் நினைவுதான். ராவணனுக்கு வஞ்சித்துக் கவரும் நினைவு; ராமனுக்கோ மீட்டுக் கொள்ளும் நினைவு.

ரூபசௌந்தரியப் பிரபந்தம் பீடிகைப் பாடல்களுடன் பதினான்கு கவிகளில் அமைந்திருக்கிறது. குணசௌந்தரிய மான்மியம் பீடிகைச் செய்யுள்களுடன் இருபத்துநான்கு கவிகளால் இயங்குகிறது.

* * *

ஏதோ ஒரு கற்குவியல் ஒரு வசீகரப் பூங்கோயிலாகி விட்டது போலத் தான் காண்கிறது, அனுமன் கூறும் குண சௌந்தரியத்தைப் பழைய கதையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது.



"நான் துணி வாங்கி வீட்டிலேயே பனியன் தைச்சுடறேன்...கடையிலே வாங்கறதில்லே!"

"என் சைஸ் பனியன் சத்தியா கடையிலே கிடைச்சுக்கிட்டிருக்குதுங்க!"